## ஸத்திய தரிசனம்.

## மகாத்மா காந்தியின் ஜீவிய சரித்திரம்.

3-ம் பிரிவு 23-வது அத்தியாயம்.

### தென்னாப்பிரிக்காவுக்குத் திரும்பிப்போன விபரம்.

மகாத்மா காந்தி "நவஜீவன்" பத்திரிகையில் தொடர்ச்சியாக எழுதிவரும் தமது வரலாறு பின் வருமாறு:—

மணிலால் குணமடைந்து விட்ட போதிலும் கிர்காம் ஜாகை வாஸத்திற்கு ஏற்றதென்று நான் நினைக்கவில்லை. அதன் தரை ஈரமாக இருந்தது; வெளிச்சமும் குறைவாகவிருந்தது. ஆகவே ரவிசங்கர் ஜகஜீவனைக் கலந்துகொண்டு பம்பாய்க்கு அருகாமையிலுள்ள ஒரு கிராமத்தில் நல்ல காற்றோட்டமுள்ள ஒரு பங்களாவை வாடகைக்கு அமர்த்திக்கொள்ளுவதென்று முடிவு செய்து கொண்டேன். பாந்திராவிலும் சாந்தா கிரஸிலும் நான் அலைந்து திரிந்து பார்த்தேன். பாந்திராவில் கசாப்புக் கடையிருந்ததால் அந்த இடம் எனக்குப் பிடிக்கவில்லை. காட்கோபாரும் இதர இடங்களும் சமுகத்திரத்திற்கு வெகு தொலையில் இருந்தன. கடைசியாக சாந்தாகிரஸில் ஒரு பங்களாவைக் கண்டு பிடித்தோம். அது சுகாதாரமான இடமாக இருந்தது. அந்த இடத்தை நாங்கள் வாடகைக்கு அமர்த்திக்கொண்டோம். சாந்தாகிரஸிலிருந்து சர்ச் கேட்டுக்கு முதல் வகுப்பு ஸீஸன் டிக்கெட் வாங்கிக் கொண்டேன். சில சமயங்களில் அந்த வண்டியில் நான் ஒருவனே இருந்து வந்ததால், அதில் நான் பெருமையடைந்ததுண்டு. அநேகமாக நான் பாந்திரா வரையில் நடந்து சென்று சர்ச் கேட்டுக்கு வேகமாகச் செல்லும் வண்டியில் ஏறுவது வழக்கம்.

நான் எதிர்பார்த்ததைவிட அதிக வருமானம் எனக்குத் தொழிலில் கிடைத்து வந்தது. தென்னாப்பிரிக்காக் கட்சிக்காரர்கள் என்னை நம்பி வழக்குகளைக் கொடுத்து வந்தார்கள். என்னுடைய செலவுக்கு வேண்டிய பணம் கிடைத்து வந்தது. ஹைகோர்ட்டில் எனக்கு வேலை கிடைக்கவில்லை. ஆனால் அந்த காலத்தில் நடந்துவந்த "மூட்"களுக்கு நான் செல்லுவதுண்டு. அதில் கலந்து கொள்ளுவதற்கு மட்டில் எனக்கு தைரியம் வரவில்லை. ஜமியத்ராம் நானாபாய் அதில் பிரதான புருஷராக இருந்துவந்தார். புதிதாக வரும் பாரிஸ்டர்களைப் போலவே ஹைகோர்ட்டுக்கு நான் போய் நடவடிக்கைகளைக் கவனிப்பதுண்டு. என்னுடைய அறிவை விசாலப்படுத்திக் கொள்ளுவதைவிட கடற்காற்று வாங்குவதற்காகவே நான் முக்கியமாகப் போவேன். இந்த சுகத்தை அனுபவிக்க நான் ஒருவன் தான் போய்க் கொண்டிருந்தேனென்பதில்லை. வேறு பலரும் அவ்விதம் வந்துகொண்டிருந்தார்கள். ஆகையால் நான் அவ்விதம் செய்து வந்ததற்காக அவமானப்பட வேண்டிய அவசியம் ஏற்படவில்லை.

இருந்தாலும் ஹைகோர்ட்டு புத்தகசாலையிலிருந்து புத்தகங்களை எடுத்துப் படித்து வந்தேன். கூடிய சீக்கிரத்தில் ஹைகோர்ட்டில் எனக்குக் கேஸ் கிடைப்பதற்காகப் பலருடன் சிநேகம் செய்து கொண்டு வந்தேன்.

இவ்விதம் ஒரு விதத்தில் நான் என்னுடைய தொழிலில் நிலைபெற்று வருகையில், மற்றொரு பக்கத்தில் ஸ்ரீமான் கோகலே எனக்காகச் சில ஏற்பாடுகளைச் செய்துகொண்டு வந்தார். வாரம் இருமுறை அல்லது மும்முறை அவர் சில நண்பர்களுடன் வந்து எனக்கு அவர்களை அறிமுகம் செய்து வைப்பதுடன், அவருடைய உத்தேசங்களையும் சொல்லிப்போவார். ஆனால் என் மனம்போல் நடந்து கொண்டுவர ஆண்டவன் எப்பொழுதும் எனக்கு அனுமதித்ததில்லை. அவருக்கு இஷ்டப்பட்ட வழியிலேயே அவர் ஏற்பாடு செய்து வந்தார்.

### தென்னாப்பிரிக்காவின் அழைப்பு.

நான் இவ்விதம் தொழிலில் ஒருவாறு நிலைபெற்று வருகையில் "சேம்பர்லேன் இங்கு வரப்போகிறார். உடனே திரும்பி வரவும்" என்று எதிர்பாராத விதமாக தென்னாப்பிரிக்காவிலிருந்து ஒரு தந்தி வந்தது. நான் ஏற்கனவே கொடுத்திருந்த வாக்குறுதி என் ஞாபகத்திலிருந்தது. பணம் அனுப்பினால் உடனே வருவதாகப் பதில் தந்தி அனுப்பிவிட்டேன். சேம்பர் வேலையை நான் விட்டுவிட்டு தென்னாப்பிரிக்காவிற்குக் கிளம்பிவிட்டேன். தென்னாப்பிரிக்காவில் ஒரு வருஷகாலமாவது வேலையிருக்குமென்று நான் எதிர்பார்த்தேன். ஆகையால் குடித்தனத்தைக் கலைக்காமல் என் மனைவியையும், குழந்தைகளையும் அந்த வீட்டிலேயே விட்டுவிட்டுப் போனேன்.

அந்தக் காலத்தில் சொந்த தேசத்தில் தொழில் கிடைக்காதவர்கள் இதர தேசங்களுக்குப் போய்விட வேண்டுமென்று நான் நினைத்திருந்தேன். ஆகையால் மகன்லால் காந்தி உள்பட 4, 5, யுவர்களை என்னுடன் அழைத்துக்கொண்டு போனேன்.

காந்தி குடும்பம் பெரிய குடும்பம். அந்தக் குடும்பத்தில் யார் யார் அந்நிய நாடுகளுக்குச் செல்ல விரும்புகிறார்களென்று தெரிந்துகொள்ள நான் விரும்பினேன். அவர்களில் பலருக்கு என்னுடைய தகப்பனார் சமஸ்தானத்தில் வேலை கொடுப்பதுண்டு. இந்த வழியிலிருந்து அவர்களைத் திருப்பிவிட நான் விரும்பினேன். வேறு வேலையை அவர்களுக்கு நான் தேடிக்கொடுக்கக் கூடுமென்பது என்னுடைய உத்தேசமன்று; அவ்விதம் தேடிக்கொடுக்க முடிந்தாலும் நான் அதைச் செய்யமாட்டேன். அவரவர்களே வேலையைத் தேடிக்கொள்ள வேண்டுமென்பது என்னுடைய அபிப்பிராயம்.

வரவர என்னுடைய அபிப்பிராயம் அபிவிருத்தியடைந்து வந்ததற்குத் தகுந்தபடி இந்த யுவர்களையும் என்னுடைய வழிக்குத் திருப்ப முயற்சி செய்தேன். மகன்லால் விஷயத்தில் என்னுடைய முயற்சி பலிதமடைந்தது. அதைப்பற்றிப் பிறகு பிரஸ்தாபிக்கிறேன்.

மனைவியையும் குழந்தைகளையும் விட்டுப் பிரிந்துபோவதும், நிலையாக இருந்த தொழிலைவிட்டுப் போவதும், நிலையான வாழ்வைவிட்டு நிலையில்லாத வாழ்வை நாடிச் செல்லுதும் முதலில் எனக்குச் சிறிது கஷ்டமாகத் தானிருந்தது. ஆனால் நிலையற்ற வாழ்வை நாடி அலைந்து நான் பழகிவிட்டேன். கடவுள் ஒருவர் இருக்கிறாரென்பதைத் தவிர வேறெதுவும் இந்த உலகில் நிச்சயமில்லை. நம்மைச் சுற்றி நடப்பவைகளெல்லாம் நிலையற்றவை; கடவுள் ஒருவரிருக்கிறாரென்பது தான் நிலையான விஷயம். அவரைக் காணுவோர் பாக்கியசாலிகள். அதையே என்னுடைய வாழ்வின் நோக்கமாக நான் வைத்துக்கொண்டு விட்டேன்.

நான் நல்ல சமயத்தில் டர்பான் போய்ச் சேர்ந்தேன். நான் செய்ய வேண்டிய வேலை அதிகமிருந்தது. மிஸ்டர் சேம்பர்லேனை பேட்டிகாணும் தேதி குறிப்பிட்டிருந்தது. நான் அவரிடத்தில் சமர்ப்பிப்பதற்காக ஒரு விஞ்ஞாபனத்தைத் தயார் செய்து தூதுகோஷ்டியுடன் செல்லவேண்டியிருந்தது.

### வெள்ளைக்காகம்.

சிலோன் குருணாக்கல்லுக்கு சமீபத்திலுள்ள கிராமத்தில் படர்ந்த ஒரு காட்டில் அநேக காகங்கள் கூடிக்கொண்டு அங்குமிங்கும் பறந்து கொண்டிருந்தன. இது என்னவென்று பார்த்ததில் அக்காட்டின் மத்தியில் ஒரு குஞ்சு தாய் காக்கையினண்டையில் இருந்தது. அதனுடைய இறகுகள் புறாவின் இறகுகளைப் போன்று வெண்மையாயும், மூக்கும் கால்களும் கருமையாகவுமிருந்தன. கருங்காகங்களெல்லாம் கூடி அவ்வெண்காகத்தை வெருட்டி துரத்திவிட்டது. பின் தினப்பிரதி அக்கிராமப்பாடசாலை தோட்டத்திற்கு வருகின்றதாம்.

### புலாலுண்ணலாமா?

(அருப்புக்கோட்டை—ஜீவகாருண்யப் பிரசார சபையிலிருந்து.)

பரமேஸ்வரனால் படைக்கப்பெற்ற இவ்வுலகத்துள் மக்கள் பிறப்பையடைந்தோர் புலாலுண்ணலாமா என்னுங்கேள்வி யாண்டும் கேட்கப்படுகின்றது. அக்கேள்விக்கு அறிஞர் பலரும் ஒரேவிடைதான் விடுத்திருக்கின்றனர். அதாவது, மனிதன் அறிவுக்களஞ்சியமாய் படைக்கப்பட்டிருக்கிறானென்றும், மனிதன் ஒருவனுக்கே பகுத்தறியுமுணர்வு ஈஸ்வரனால் கொடுக்கப்பட்டிருக்கிறதென்றும், அவ்வுணர்வு இல்லாத மிருகம், பறவை முதலிய ஐயறிவுடைய ஜெந்துக்களைப்போன்றோர் மக்களென்றும், பகுத்துணர்ந்து அறத்தின் வழியிலே நின்று எவ்வுயிருந் தன்னுயிர்போலப் பேணுதல்செய்து "அஹிம்ஸா பரமோ தர்ம:" என்பதைக் கைக்கொண்டு புலையுங் கொலையுங் களவுந் தவிர்த்து, தவம், தூய்மை, தத்துவ ஞானோர்தல், மனம் உவந்திருத்தல், தெய்வம் வழிபடல் முதலான நியம நியமங்களை விரதமாகக்கொண்டு வாழ்வோரே மக்களென்றும், அன்னோர் எவ்விடத்தும் எக்காலத்தும் பிரஜீவராசிகளைக் கொன்று அவற்றின் புலாலைத்தின்று உடல்வளர்ப்பதை வெறுத்தொதுக்கிவாழ்வரென்றும், புலாலுண்ணுதல் மனிதஜென்மமெடுத்தோர்க்கே கூடாதென்றும், அட்சுர ராக்ஷஸர் முதலியவர்களுங்கூட தவத்தைக்கருதி மது, மாமிசாதிகளை விட்டுவிடும் போது, மனிதன் அதை எவ்வளவு தூரம் வெறுத்தொதுக்க வேண்டுமென்பது சொல்லாமலே விளங்குமென்றுங் கூறியிருக்கின்றனர். கீழ் வருவன இவற்றை விளக்கப்போதுமானது.

"பொல்லாப்புலாலை நுகரும்..." என்று திருமூலநாயனாரும் "கொலைவினையராகிய மக்கள் புலைவினையர்" —"உண்ணாமைவேண்டும் புலால்" "செயிரிற்றலைப்பிரிந்த காட்சியாருண்ணார், உயிரிற்றலைப்பிரிந்த ஊன்" "உயிர்களுகுண் செய்யாமை அற்றே தவத்திற்குரு" என்று திருவள்ளுவரும் "ஊனைத்தின்று ஊனைப் பெருக்காமை முன்னினிதே" என்று ஔவைப்பிராட்டியுங் கூறியிருத்தலால், புலாலுண்ணுதல் கூடாதென்றும், அவை நமது தவத்தையுங்கெடுத்து நரகத்திற்காட்படச் செய்யுமெனவும் உணர்ந்து இன்றே புலாலுணவை நீக்கி இம்மை மறுமைக்கு வேண்டிய நல்வழி செல்வோம்.

### மதம் மாறுதல் சட்டம்.

ஸ்ரீ வாலிமகமது ஹூசேன் என்பவர் ஜனங்கள் மதம் மாறும் தொல்லையை ஒரு கட்டுப்படுத்தவேணுமாய் "சிந்து அப்ஸர்வர்" பத்திரிகையின் பின்வருமாறு யோசனை கூறுகிறார்:—

தக்கவயது வந்து மேஜராகவான பின் தான் எவரும் மதம் மாறுதல் செய்யலாமென்றும் அவ்வித அபிப்பிராயமுள்ளோர் முதல் வகுப்பு மாஜிஸ்டிரேட் ஷையார் உண்மையில் மேஜர் தானென்பதையும் வேறு யாருடைய பலாத்காரமான தூண்டுதலின் பேராலன்றி அவன் மதம்மாற இஷ்டப்பட்டிருக்கிறான் என்பது சம்பந்தமாகவும் நீர விசாரித்துத்தான் மதம்மாற அனுமதி கொடுக்கவேண்டும். இவ்விதமாக அகில இந்தியா பூராவுக்குமாக ஓர் சட்டத்தை திட்டம் செய்திடில் மதமாறுதல்களால் நிகழும் சச்சரவற்றுப்போமென அபிப்பிராயப் படுகிறேன்.

### தேவை.

தூத்துக்குடி காமைப்பேட்டை நாடார் வித்தியாசாலைக்கு செக்கண்டரி கிரேடு ட்ரெயிண்டு உபாத்தியாயர் ஒருவரும், ஹயர் கிரேடு ட்ரெயிண்டு உபாத்தியாயர் ஒருவரும் தேவையாயிருக்கிறது.
கெட்டிக்காரத்தனத்துக்கும் அனுபோகத்துக்கும் தக்கபடி நல்ல சம்பளம் கொடுக்கப்படும். விபரத்திற்கு அடியிற்கண்ட விலாசத்திற்கு எழுதவும்.

விலாசம்:—
P. P. K. பொன்னுசாமிநாடார்,
மானேஜர்,
காமைப்பேட்டைநாடார்வித்தியாசாலை
தூத்துக்குடி.

### கிராம தேவதைகளின் ஆராய்ச்சி.

நமது நாட்டில் உள்ள கிராம தேவதைகளைப்பற்றி நாங்கள் ஆராய்ச்சி செய்து கொண்டிருக்கிறோம். அது சம்பந்தமான பல விஷயங்களைச் சேகரித்து வைத்திருக்கின்றோம். ஒரு புத்தக வடிவமாக வெளியிட உத்தேசித்துள்ளோம். எனவே, பல வேறு ஜில்லாக்களிலும் ஊர்களிலும் நடைபெறும் சிறு தெய்வ வழிபாட்டைக் குறித்து, ஆராய்ச்சி வளர்ச்சியில் பிரியமுள்ள நண்பர்கள் தங்களுக்குத் தெரிந்த பல விஷயங்களையும் குறிப்பாக அன்புடன் எழுதியனுப்ப வேண்டுகிறோம். சிறந்த விஷயங்களை எழுதியனுப்புவோருக்குப் புத்தகம் வெளிவந்தவுடன் ஒரு பிரதி இனாமாக அனுப்பப்படும். எழுதுவோர் கீழ்க்கண்ட விஷயங்களைக் கவனித்து எழுத வேண்டும்.

(க) கிராம தேவதைகளின் பெயர், காரணம், ஏற்பட்ட காலம், வரலாறு, தற்கால நிலை, கோயில் அமைப்பு, கோயில் இருக்குமிடம், பலிபீடங்களின் வகை, வழிபாட்டுமுறை, விழாக்களின் பெயர், நிலை ஆகியவற்றை விவரிக்க.

(உ) எத்தனை விதமான தேவதைகள் ஒரு ஆலயத்திலுள்ளன? சிலாரூபமானவை எவை? உயிருள்ள மரங்களில குடி கொண்டிருப்பன எவை? எக்காரணங்களை முன்னிட்டு, எத்தனை வகையான பிராணிகள் எப்படி எப்படி உயிர்ப்பலியிடப் பெறுகின்றன?

(ங) பூசாரி, மருளாடி, பொது ஜனங்கள் ஆகியவர்கள் செய்யும் காரியம், பிரார்த்தனை, நேர்த்திக் கடன் வழக்கம் யாவை?

(ச) சிறு தெய்வங்களைப்பற்றிய கதை, பாட்டு, பழமொழி, வில்லடிக்கும் பொழுதும், சுவாமி அழைக்கும் பொழுதும் கூறும் பாடல்கள், ஏடுகள், சிறு நூல்கள் கிடைத்தால் அனுப்புக.

(ரு) பிரபலமான பிசாசுகள், முனிகள், கண்ணகி துரோபதை போன்ற கற்புடைமகளிர், மதுரைவீரன், கறுப்பன், காத்தவராயன் போன்ற வீரர்கள் போல உள்ள பிற வீரத்தெய்வ வரலாறுகள் எவை?

(சு) புராதனமான சிறு தெய்வம், புதுத்தெய்வம், புராதன வழக்கம், புது வழக்கம் எவை? எந்தப்பெரிய வைதீக தேவாலயங்களில் எந்தச் சிறு தெய்வங்களின் தொடர்பு உண்டு? எந்த எந்த தெய்வங்களை எந்த எந்தச் சாதியார் முக்கியமாக வணங்குகிறார்கள்? அனைவரும் வணங்குவன எவை? வணங்கப்படாது, வாழ்விழந்தன எவை?

(எ) மேற்கூறியவாறு பல விஷயங்களைச் சிந்தித்து, நேரில் கிராம தேவதைகளைப் பார்த்து, பூசாரி, பக்தர் ஆகியவரிடம் விஷயங்களைத் தெரிந்து அன்பர் ஒவ்வொருவரும் கீழ்க்கண்ட விலாசத்திற்கு எழுதியனுப்ப வேண்டுகிறோம்.

காரியதரிசி,
காரைச்சிவனடியார் திருக்கூட்டம்,
காரைக்குடி,
இராமநாதபுரம் ஜில்லா.

### போட்டோ காமிரா



இது புதிதாக வண்டன் மாநகரில் கண்டுபிடிக்கப் பட்டது. இதனால் போட்டோப் படங்கள் பிடிக்க சிறுபிள்ளைகளும் எளிதில் கற்றுக் கொள்வதற்கு என்றே தயார் செய்யப்பட்டது. கற்றுக்கொண்டு மாதம் ரூ 50 முதல் 500 வரை சம்பாதிக்கலாம். புகைப்படம் பிடிக்கும் ரகசியங்கள் தாமிலவுடன் சேர்த்து அனுப்பப்படும். விலை ரூ 3-8-0

(ரூபாய் மூன்று அணா எட்டு)
கிடைக்குமிடம்:—HART & Co
Coimbatore, (S. India)

Tamil Heritage Foundation International Digital Library EBook collection

## கான்பரன்ஸ்.

(மதுரை, நண்பன் எழுதியது.)

காலச்சக்கரமோ ஒருவரையும் எதிர்பாராமல் வேகமாய்ச் சுழன்றுகொண்டிருக்கின்றது. ஆதியில் ஆரியப் பார்ப்பனர்களால் ஏற்படுத்தப்பட்ட ஜாதி வித்தியாசத்தாலும், தீண்டாமையினாலும் பாதாளத்தை நோக்கிப் பறந்து கொண்டிருக்கும் பாரதநாடு இனி மீள முடியாதென்றெண்ணி கை கொட்டி நகைத்த பார்ப்பனர்கள் வெட்கித் தலை குனியும் வண்ணம் பார்ப்பனரல்லாதார் முனைந்து விட்டனர். தீண்டாதவர்களுக்குப் பூட்டியிருக்க விலங்குகளும் உடைபட்டு வருகின்றன. பார்ப்பனர்களையும் சமமாய்க் கோவிலுக்குள் நுழைய விடக்கூடாதென்ற கிளர்ச்சியும் ஒரு பக்கம் புறப்பட்டுவிட்டது. சிவ மதத்தினராலும், வைஷ்ணவ மதத்தினராலும் கட்டப்பட்ட கோவிலுக்குள் சுமார்த்தப் பார்ப்பானுக்கு என்ன வேலை யென்று அக்கோஷ்டியினர் அறைகின்றனர். அவ்வாறே காலடையில் பார்ப்பனர்கள் கோவிலுக்குள் நுழைய முடியாதபடி பார்ப்பனரல்லாதார் தடுக்குங் காலமும் நெருங்கிவிட்டது. அரசியலில் பார்ப்பனர் கொட்டத்தை அடக்கிவிட வேண்டுமென்று பார்ப்பனரல்லாத தலைவர்கள் கிளர்ச்சி செய்து வருகிறார்கள். அதுவும் முடியக்கூடிய காரியமே. இப்படி அரசியலிலும், சமூகவியலிலும் பார்ப்பனரல்லாதார் முன்னேற்றமடைந்து வரும் சமயத்தில் க்ஷத்திரியர்களாகிய நாடார்கள் என்ன செய்துகொண்டிருக்கிறார்கள் என்றால், "தூங்கிக்கொண்டிருக்கிறார்கள்" என்ற ஒரே ஒரு பதில்தான் சொல்ல முடியும். பாரத நாடே முன்னேற்றமென்னும் எல்லையை நோக்கி ஓடிக் கொண்டிருக்கும் சமயம் நாமும் தொடர்ந்து ஓடினால்தான் குறிப்பிட்ட லக்ஷியத்தை அடைவது சுலபமாகும். ஆகவே இது சமயம் எல்லோரோடும் சேர்ந்து நாமும் முன்னேற்றமடைய முயற்சிக்க வேண்டும். இதுசமயம் நாம் தூங்கினால் எப்போதும் நமது லக்ஷியம் கைகூடப் போவதில்லை யென்பது உறுதி. இது நிற்க,

ஸ்ரீமான் டி. ரத்தினசாமி நாடார் அவர்களால் அடிகோலப்பட்டு நடந்து வரும் நமது சங்கத்தினுடைய ஆதரவில் அநேக மஹாநாடுகள் கூடி முக்கிய தீர்மானங்கள் நிறைவேற்றி அதில் சிலவற்றை அமுலுக்குக் கொண்டுவந்து அதனால் நமது ஜன சமூகம் நன்மை யடைந்திருக்கிறதென்றாலும் போதுமானவரை முன்னேற்றமடையவில்லை என்பதே நமதபிப்பிராயம்.

சிவகாசிமாநகரில் நடந்த மகாநாட்டுக்குப் பின்னால் நம் ஜாதியில் சற்று ஊக்கம் குறைந்திருப்பது பிரத்தியட்சம். அதன் பின்னால் மஹாநாடுகள் குறிப்பிட்ட காலங்களில் நடைபெறாது நின்று வருந்தத்தக்கது. அதன் பின்னால் நாடார் மஹாஜனங்களை தட்டி எழுப்பத் தூண்டுகோலாயிருக்கும் நாடார் மஹாஜன சங்கத்திற்கும், "நாடார் குல மித்திர"னுக்கும் பணக்கஷ்டம் ஏற்பட்டதினால் நாடார் மஹாஜனங்களின் ஊக்கம் குறைவுபட்டது. ஆனால் தற்போது தெய்வ கடாட்சத்தால் அக்கஷ்டங்கள் எல்லாம் நீங்கிவிட்டன. என்றாலும் நம் பொது ஜனங்களிடத்தே ஏற்பட்ட சோர்வு இன்னும் நீங்கவில்லை யென்பது பிரத்தியட்சம். இந்நிலையிலுள்ள நாடார் மஹாஜனங்களிடத்தில் உற்சாகமூட்டி பழைய நிலைமைக்குக் கொண்டுவருவது சங்கத்தின் உத்தியோகஸ்தர்களைச் சார்ந்தது.

தவிர கான்பரன்ஸ் கூடும் காலமும் சமீபித்து விட்டது. அசந்தரிய ஏற்பாடுகள் ஒன்றும் இதுவரையில் நடந்ததாகத் தெரியவில்லை. உலகம் போற்றும் உத்தமர் மகாத்மா காந்தியை அக்கிராசனத்திலமர்த்தி திருநெல்வேலியில் மஹாநாடு கூட்டப்போகிறோம் என்று மதுரை மஹாநாட்டில் கர்ஜித்த இரு சிம்மங்களும் எங்கிருக்கின்றனவோ தெரியவில்லை. தவிர மற்ற வேலைக்காரர்களும் ஒன்றும் இதுவரையில் செய்ததாகத் தெரியவில்லை. இந்நிலையில் "கும்பிடப் போன சாமி குறுக்கே வந்ததுபோல்" மகாத்மாவும் தென்னாடு சுற்றுப்பிரயாணம் செய்யும் காலமும் சமீபித்துவிட்டது. இதுவரையில் மஹாநாடு நடந்த நகர்களைக் காட்டிலும் மகாத்மாவை அக்கிராசனத்தமர்த்தி மஹாநாடு கூட்டும் நகருக்கே அதிக மதிப்புண்டு என்பது தான சொல்லாமலே விளங்கும். ஆகையால் எந்த நகரத்தார் இந்த பெருமைக்காளாகிறார்களோ தெரியவில்லை. இது நிற்க,

நாடார்கள் வசிக்கும் முக்கிய நகரங்களில் ஒன்றாகியும், நாடார் குலத்திற்கு அறிவுச் சுடர் கொளுத்திய "நாடார்குல மித்திரன்" பிறப்பிடமாகியுமுள்ள அருப்புக்கோட்டையில் இதுவரையில் ஒரு மஹாநாடும் கூடாதது இங்கே வருந்தத்தக்கது. ஆகையால் இம்முறை அங்கு கூட்டுவித்தால் நலமாயிருக்கும். சுபம்.

---

II

(விருதுநகர் நாடார் பரிபாலன சங்கத்தாரிடமிருந்து.)

நாட்டில் சாதி மகாநாடுகளும், சமய மகாநாடுகளும் பெருகி தத்தம் சாதியின் நலன் குறித்துப் பாடுபடுகின்றன. ஒவ்வொரு வகுப்பினரும் சாதி மகாநாடுகள் கண்டு அதன் மூலம் சமுதாய அரசியல் சுதந்திரங்களை அடைந்துகொண்டு வருகின்றனர். நாட்டில் வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் என்னும் தத்துவத்திற்கு செல்வாக்கு வளர்ந்துகொண்டே செல்லுகிறது. வடக்கே இஸ்லாமிய, கிறிஸ்தவ மகாநாடுகளும், தெற்கே பிராமணரல்லாதார் மகா சபையும், அச்சபையினுள்ளடங்கி இருக்கும் சாதிய மகாநாடுகளும், வகுப்புவாரிப் பிரதிநிதித்துவத்தை வலியுறுத்திக் கொண்டிருக்கின்றன. இந்நிலையில் சீர்திருத்தம் வழங்கும் ராயல் கமிஷனும் நெருங்கிவிட்டது. பிரஸ்தாப ராயல் கமிஷனில் வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் முக்கிய அம்சமாகக் கருதப்படலாம் என்பதை மறுக்க முடியுமா? அதற்கு அதிக செல்வாக்குக் கிடைக்கலாமன்றோ?

இந்நிலையில், தனிச் சாதியக் கிளர்ச்சிகளுக்குத் தாயகமாயிருந்த நாடார்களாகிய நாம் என் செய்தல் வேண்டும்? அழைப்பாரின்றி அயர்ந்து நித்திரையிலிருக்கும் நமது கான்பரன்ஸை திறனுடன் நடாத்தி சமீப காலத்தில் வழங்கப்போகும் சீர்திருத்தத்தில் தகுந்த பங்கு எடுத்துக்கொள்ள வேண்டாமா? சீர்திருத்தம் வருமுன் நாம் அவைகளை அனுபவிக்கத் தகுந்தபடி நம்மக்களைத் தேற்ற வேண்டாமா?

மமதை கொண்ட கிழ்தா கலால் உத்தியோகஸ்தர்களால் துன்புறுத்தப்படும் தென்னாட்டிலிருக்கும் கூலிக்காரர் பாலும் பட்டுழலும் ஏனைய ஏழை மக்களுக்கும் கல்வியென்னும் தெய்வீக மந்திரத்தை ஓதவேண்டாமா? இக்கடன்களை முறையே ஆற்றுவதற்கு உறங்கும் 11-வது கான்பரன்ஸை நடாத்தி பொது ஜனங்களிடையே விசேஷக் கிளர்ச்சி யுண்டுபண்ணுவதை விட வேறு என்மார்க்கமுண்டு?

ஆகலான் அயர்ந்த ஐந்தாவது மகாநாட்டை விமரிசையாக நடாத்திய விருதுநகர் வாசிகளே! இம்முறையும் உங்களிடையே முறையிடுகிறோம். பலசாதி மகாநாடுகள் நடைபெறுவலைக் கண்டும் நம் தாய் மகாநாடு நடைபெறாததைப் பார்த்து லக்ஷமுறும் நாடார் மக்களுக்கு ஆக்கமளிக்க இம் முறையும் 11-வது மகாநாட்டை நடத்த முன் வருவீர்களா? அப்படி வருவீர்களானால் நாடார் உலகம் உங்களை எக்காலும் மறக்காது.

---

## விடுதலை செய்யப்பட்டார்.

காரணம் இன்னதெனக் காட்டாதும் விசாரணை எதும் நடத்தாதும் சிறையிலடைக்கப்பட்ட வங்காளிகளில் முக்கியஸ்தராகிய ஸ்ரீமான் சுபாஸ் சந்திர போஸுக்கு சிறையில் அசௌகரியமேற்பட்டும் கவர்ன்மெண்டார் நிபந்தனையின்றி விடுதலை செய்வதில்லையென சொல்லி பின்னும் தேக நிலை அபாயகரமாய் வரவே மே மீ 16 உ விடுதலை செய்யப்பட்டிருக்கிறார்.

---

## இலங்கைக் கடிதம்.

(ஒரு நிருபரிடமிருந்து)

### மதுவிலக்குக் கூட்டம்.

தற்போது இலங்கை பூராவும் மதுவிலக்கு சம்மந்தமான கூட்டங்கள் நடைபெற்று வருகின்றன. யாழ்ப்பாணம், கொழும்பு, கொட்டாஞ்சேனை முதலிய இடங்களில் [illegible] கூட்டங்கள் கூட்டப்படுகின்றன. இதன் முக்கிய காரணம் இலங்கை சட்டசபையில் மதுவிலக்குத் தீர்மானம் கொண்டுவரப்பட்டிருக்கிறது. தேசமகாஜனங்கள் அதற்கு ஆதரவு கொடுத்துத் தீர்மானம் நிறைவேற்றி வருகிறார்கள். மதுவிலக்கு எதிரிகளாய் உள்ளவர்களின் தீர்மானங்களும் நிராகரிக்கப்பட்டுவருகின்றன.

### நாடார் சமூகச் சங்கம்.

இலங்கையில் நாடார் பெருமக்கள் சுமார் லட்சம் பேரிருப்பார்கள் என்று ஊகிக்க இடமேற்படுகிறது. சமூக நலம், தேச நலம் குறித்து பல்வகைப்பட்ட இயக்கங்கள் நாட்டிடையே தோற்றப்படுகின்றன. நலம் பெற உழைத்தும் வருகின்றன. இலங்கை தேசம் வந்தும் நாடார் பெருமக்களுக்கென்று ஏற்கனவே தோற்றப்பட்டுள்ள சங்கங்கள் எந்நிலையில் இருக்கின்றன வென்று திட்டமாய்த் தெரியவில்லை. "இலங்கை இந்திய க்ஷத்திரிய நாடார் சங்கம்," ஒன்றிருப்பதாய்ச் சொல்லப்படுகிறதே யொழிய அதன் வேலைகள் ஒன்றையும் காணோம். பெயரளவில்—எழுத்தளவில் இருப்பது குல தர்மமாகுமா? நிற்க, தற்போது புதுச் சங்கம் ஒன்று தோன்றச் செய்ய அன்பர் பலர் முனைந்து நிற்கின்றார்கள். மகாநாடு ஒன்று நடத்தவும் ஆலோசனை செய்யப்பட்டுவருகிறது. இவ்விஷயமாய் மற்றும் நடவடிக்கைகள் அடுத்து எழுதுவோம்.

### கொழும்புக் கோட்டை ஸ்டேஷன்.

தற்போதிருக்கும் கொழும்புக் கோட்டை ஸ்டேஷன், பேட்டை, கோட்டை என்ற இரு டேஷன்களை ஒன்றாக இணைக்கப்பட்ட ஸ்டேஷன். இதை புதுப்பிக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்கிறது. உற்சவ காலங்களில் போக்கு வரத்து அதிகமேற்படுவதினாலும், பார்சல் போக்கு வரத்து அதிகமேற்பட்டுவிட்டதினாலும் புதுப்பிக்க வேண்டியதிருக்கிறதாம். சுமார் 3 லட்ச ரூபாய் பிடிக்குமாம். இத்தொகையும் சாங்கிஷன் செய்யப்பட்டு இவ்வாண்டில் 1 லட்ச ரூபாய் வேலை நடைபெறுமென்று தெரிகிறது. பார்சல் ஆபீஸ் முதன் முதல் கட்டப்படுமாம். பிளாட் பாரம் கேபின்வரையும் நீட்டப்படுமாம். எல்லாப் பிளாட் பாரங்களுக்கும் மேற் கூரை முழுவதும் போடப்படுமாம். இதனால் ஜனங்களுக்கு மிக்க சௌகரியமே.

### புதிய எமன்கள்.

கொழும்பு டவுனிலும், சுற்றுப் புறங்களிலும் நாடோறும் மோட்டார், ட்ரெய்ன் இவைகளால் மனுடர் பலர் எமனுலகம் சென்று கொண்டிருக்கின்றனர். இச்சம்பவங்கள் திடீரெனவும், அகஸ்மாத்தாகவும், அஜாக்கிரதையாகவும் ஏற்படுகின்றன. புறவைகளைப்போல் மோட்டார்கள் அங்குமிங்கும் பறக்கும் இக்காலில் மனுடர் பலரும் ஜாக்கிரதையாய்த்தான் செல்ல வேண்டியிருக்கிறது. அல்லது ஆளுக்கொரு மோட்டாராவது வாங்கிக் கொள்ளவேண்டும். மோட்டாரே நிறைந்து விடுமென்று வைத்துக் கொண்டாலும் ஒன்றுக் கொன்று முட்டிக் கொண்டு சாக வேண்டியதுதான். ஆகாய விமானம் வந்தால் மிகவும் பொருத்தமே. அதுவும் "பழைய குருடி கதவைத் திறடி" என்பதுதான். என்ன செய்கிறது? இதற்கொரு கமிஷன் நியமித்து இயந்திர சாஸ்திர விற்பன்னர்கள் கவனிப்பார்களா? எமனுக்கு வேலை கொடாமல் இவர்களே அவ்வேலை பார்ப்பது நமக்கு ஒரு பக்கம் துவேஷமும், ஒரு பக்கம் கவலையையும் அளிக்கின்றது. நிற்க, இதுபோதாதென்று துப்பாக்கி முதலிய ஆயுதம் தாங்கி பலர் மனுடரை மிருகமென மதித்து வேட்டையாடி வருகின்றனர். இச்செய்கை இலங்கையில் நாடோறும் நடைபெறுகின்றது. ஆத்ம சக்தியை சதா அந்நியர்களுக்களித்த பாரத பூமி மிருக சக்தியைப் பயின்று வருதல் நன்றோ? பாரத நாட்டின் இயற்கை மணம் மாறி செயற்கை மணம் கமழுவதற்கு காலம் வந்ததா!

---

## ஆதிதிராவிட வைதீக சமாஜ நிறைவுவிழா.

(விசேஷ நிருபரிடமிருந்து.)

சிதம்பரம் ஸ்ரீ நந்தனார் மடத்தின் பரிபாலனரும் சென்னை சட்டசபை அங்கத்தவரும் முனிபுங்கவருமான ஸ்ரீலஸ்ரீ சுவாமி சகஜானந்தம் அவர்களும் அவர்களது சிஷ்ய திலகம் ஸ்ரீசச்சிதானந்த மூர்த்தி அவர்களும் (15—5—27) காலை 8½ மணியளவில் தனுஷ்கோடி மார்க்கமாய் கொழும்பு கோட்டை ஸ்டேஷன் வந்திறங்கினர்.

ஆதிதிராவிட வைதீக சமாஜத்தலைவர்களும் மற்றும் பல அபிமானிகளும் புஷ்பஹாரங்கள் சூட்டி வரவேற்றனர்.

மாலை 2 மணிக்கொல்லாம் கொழும்பு பப்ளிக் ஹாலில் சமாஜ ஆண்டு விழா வைபவம் நடைபெற்றது. சுமார் 500 பேர்வரை குழுமியிருந்தனர்.

விஜயம் செய்த பெரியோர்கள் பின்வருமாறு;—ஸ்ரீமான்கள் ஐ. எக்ஸ். பெரைரா, எம். எல். ஸி., கோ. நடேசய்யர் எம். எல். ஸி., இ மிசியர், ஸி. என். சிவடையார், அரு. முத்தையா அம்பலம் பத்திராதிபர் "நியாயமணி", எ. எஸ். மதுரேந்திரநாடார், எஸ். ஏசுதாஸ்நாடார் மற்றும் பலர் விஜயம் செய்திருந்தனர்.

மத ஒழுக்கங்குன்றா முறையில் தூப தீபங்களுடன் கடவுள் வணக்கம் செய்யப்பட்டது. தலைவர் முகவுரை கூற சபையின் அறிக்கைப் பத்திரம் படித்து முடிக்கப்பட்டது. ஸ்ரீமான்கள் கோ. நடேசய்யர், ஐ. எக்ஸ். பெரைரா, ஜி. மிசியர், சச்சிதானந்த மூர்த்தி முதலியவர்களால் சமயோசிதமாய் உபந்நியாசம் செய்யப்பட்டது. முகவுரையிலும், முடிவுரையிலும் ஸ்ரீ சுவாமியவர்கள் நிகழ்த்திய சொற்பெருக்கு செவிக்கும் உள்ளத்திற்கும் இன்பத்தையும் சாந்தியையும் அளித்ததென்றே கூறவேண்டியிருக்கிறது. உலகை புனருத்தாரணம் செய்ய வெழுந்த அவதாரமூர்த்திகள் தாழ்ந்த நிலையில் தாழ்மையான இடத்தில் தாழ்மையை போதிக்க வெழுந்து தோன்றியிருக்கிறார்கள்—தோன்றுகிறார்கள்—தோன்றப் போகிறார்கள் என்பதற்கு நிதர்சனமாக ஸ்ரீலஸ்ரீ சுவாமி சகஜானந்தம் புவியில் அவதரித்திருக்கிறார் என்றே சொல்லவும் வேண்டியிருக்கிறது.

சாதாரண கதர் உடையும் குளிர்ந்த பார்வையும் தளர்ந்த நடையும் ஆத்மசக்தியினை அடிப்படையாகக்கொண்ட அவரின் வீரம் செறிந்த சொற்களும் ஆதிதிராவிட சகோதரர்களின் எதிர்கால க்ஷேமங்கருதி எம்பெருமான் ஸ்ரீ சகஜானந்தமாக அவதாரம் செய்திருக்கின்றார் என்று தான் செப்பவும் வேண்டியிருக்கிறது.

நிற்க ஆதிதிராவிட வைதீக சமாஜ அங்கத்தவர் அனைவரும் இந்து சமயத்தவர் என்று கேட்கவும் நாம் மிகவும் வியப்படைந்தோம். நிறைவுவிழாவிற்கு விஜயம் செய்திருந்த நமது ஆதிதிராவிட சகோதர, சகோதரிகள் அனைவரும் இந்து மதத்தவர். சமய சின்னங்களுடன் அவர்கள் விளங்கிய காட்சி மாட்சிமையையும், மதப் பற்றுதலையும் காட்டியது.

முடிவில் தலைவரவர்கட்கும், விஜயம் செய்த பெரியோர்கட்கும் வந்தனோபசாரம் கூறி புஷ்பஹாரம் சூட்டப்பட்டு நிறைவிழா மங்களகரமாய் முடிவுபெற்றது.

Tamil Heritage Foundation International Digital Library EBook collection

## லாட்டரிச் சீட்டு அறிக்கை.

நமது "மித்திரன்" லாட்டரிச் சீட்டில் உதயமான பிரைஸ்தார்களை முழுவிலாசங்களுடனும், பூரா விபரத்துடனும் வியக்தமாகத் தெரியுமாறு வெளியிடத் தீர்மானித்து ஜாபிதா தயாராகும் வேலை நடந்து வருவதால் பூர்த்தியாய் வேலை முடிய இன்னும் மூன்று வாரங்கள் வரை செல்லுமென மதிக்கின்றோம். தயாரானவுடன் சீட்டுப் புஸ்தகங்கள் விற்ற கனவான்களுக்கும், 2 அணு ஸ்டாம்பு அனுப்பியவர்களுக்கும் ஜாபிதா அனுப்பி வைக்கப்பெறும்.

பத்திராதிபர்.

---

## நாடார்குலமித்திரன்

பிரபவ ஞூ வைகாசி மீ ௰வ

---

## அகில இந்திய காங்கிரஸ் கமிட்டி.

பம்பாயில் கூடிய அகில இந்திய காங்கிரஸ் கமிட்டியானது நாளது மே மாதம் 15வ முதல் 18வ வரை கூடி சில தீர்மானங்களைச் செய்து கலைந்துவிட்டது. தீர்மானங்கள் பலவித நோக்கங்களோடு செய்யப்பட்டிருப்பதால், இப்போது காங்கிரஸில் மெஜாரிட்டியாயிருக்கும் சுயராஜ்யக் கட்சியாருக்குள்ளேயே பல அபிப்பிராய பேதங்கள் உண்டாயிருப்பதாகத் தெரிகிறது. சுயராஜ்யக் கட்சியாருக்குள் மிகுந்த கட்டுப்பாடும் ஒற்றுமையும் உண்டென்றும், அதற்குப்போல நிர்மாணத் திட்டங்கள் வேறு எந்த ராஜீயக் கட்சிக்கும் கிடையாதென்றும் எழுதிவந்த "சுதேசமித்திரன்" இப்போது அதன் அங்கத்தினர்களையே தாக்க ஆரம்பித்துவிட்டது. மகாத்மா காந்தியவர்களால் உண்டாககப்பட்ட ஒத்துழையாமை இயக்கத்தை சட்ட விரோதமென்று கூறிய ஸ்ரீமான் ஸ்ரீநிவாசய்யங்காரவர்கள் காங்கிரஸின் தலைவராக வந்த பிறகு காங்கிரஸின் கொள்கை சொல்வதொன்றும், செய்வது மற்றொன்றுமாகப் பின்னேக்கிப் போய்க்கொண்டிருக்கிறது. முக்கியமாய்ச் சென்னையில் சுயராஜ்யக் கட்சியார் மெஜாரிட்டியாவதற்காக எலெக்ஷன் நடக்கு முன்னாலேயே ஸ்ரீமான் அய்யங்காரவர்கள் பின்னாத சிடித்ததை மதுரையிலுள்ள முக்கியஸ்தரெல்லோரும் அறிவார்கள். மகாத்மா காப்பிக்குடி தேசத்தைக் கெடுப்பதால் வேண்டாமென்று கட்டளையிட்டார்; ஸ்ரீமான் அய்யங்கார் மதுரையில் ஒரு பார்ப்பனருக்குக் காப்பிக்கிளப் திறந்துவைத்தார். வக்கீல் தொழிலை விட்டுவிட வேண்டுமென்று மகாத்மா கேட்டுக்கொண்டார்; ஸ்ரீமான் அய்யங்கார் மதுரையில் கூடிய மஹாநாட்டில் வக்கீல்கள் காங்கிரஸைவிட்டு விலகியிருந்ததால் உற்சாகம் குறைந்துவிட்டது; ஆகையால் வக்கீலகளெல்லாம் பழையபடியும் காங்கிரஸில் வந்து நுழைந்து வேலை செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொண்டார். அதன் பலனாகவே சென்னை சட்டசபையில் சுயராஜ்யக் கட்சியார் அதிகம் பேர் வர சாத்தியமாயிற்று.

மகாத்மா காங்கிரஸிலிருந்து விலகி ஓய்வெடுத்துக்கொள்ளும்படி நேர்ந்ததும், கிராமங்தோறும் தேசீய உற்சாகம் ஓங்கியிருந்தது அழிந்துபோகநேர்ந்ததும், பழையபடியும் படித்தவர்கள் உத்தியோகத்துக்கு அலையும்படியான உணர்ச்சியை உண்டாக்கியதும் காங்கிரஸ் சபையிலுள்ள சுயராஜ்யக் கட்சியாரின் செய்கையே தவிர வேறன்று.

இப்போது கூடிய காங்கிரஸ் கமிட்டியும் பேச்சளவில் நல்லது போலத் தோன்றும்படி ஹிந்து முஸ்லீம்கள் வகுப்புவாரியாயில்லாமல் கலப்புத் தொகுதியின் மூலம் சட்டசபைகளுக்குத் தேர்ந்தெடுக்க வேண்டுமென்ற தீர்மானமானது தேசமிருக்கும் நிலைமையை அறியாமல் செய்த ஏட்டுச் சுரைக்காய்த் தீர்மானமேயாகும். இதனால் ஹிந்து முஸ்லீம்களுக்குள் மதக் கலகத்தோடு ராஜீயக் கலகமும் ஏற்படுமே தவிர வேறு பலன் விளையாதென்று அஞ்சுகிறோம். இத்தீர்மானத்தை எல்லா ஹிந்துக்களும், முகம்மதியர்களும் ஒருமுகமாக ஏற்றுக்கொள்ள மாட்டார்களென்பது பத்திரிகைகளில் வெளிவரும் அபிப்பிராயங்களால் தெரியக்கிடக்கின்றது.

சென்னை சுயராஜ்யக் கட்சியார் சட்டசபையில் நடந்துகொண்டு வரும்பான்மையைக்குறித்துக் கண்டனத் தீர்மானம் வரும்போது தலைவராயிருந்த பண்டித நேருஜீ அவர்கள் பத்து நிமிஷத்துக்குள் வாதப்பிரதி வாதங்கள் முடிந்து விட வேண்டுமென்று உத்தரவிட்டாராம். காங்கிரஸில் பெரும்பான்மையோராயுள்ள சுயராஜ்யக் கட்சியார், ஒரு மாகாணத்தில் ஓட்டர்களிடம் கொடுத்த வாக்குறுதியை மீறியும், கௌஹாத்தி காங்கிரஸ் தீர்மானத்துக்கு நேர் விரோதமாகவும் நடந்த விஷயத்தைக் குறித்து கண்டனத் தீர்மானம் வரும்போது மற்றவிஷயங்களுக்காக மூன்று நாளும் யோஜனை செய்தவர்கள் இதை அற்ப விஷயமாக நினைத்து பத்து நிமிஷம் கொடுத்ததாய்ச் சொல்லுவதும், அதைக் குறித்துக் குழப்பமேற்பட்டு, காரியக் கமிட்டிக்கு அனுப்பப்படுவதும், காரியக் கமிட்டி உடனே கூடி சென்னைச் சட்டசபையில் சுயராஜ்யக் கட்சியார் செய்கையை அவர்களிடம் சமாதானங் கூடக் கேளாமல் ஆதரித்துத் தங்கள் அபிப்பிராயங்களை வெளியிட்டுவிட்டதும் சுயராஜ்யக் கட்சித் தலைவர்களின் அகம்பாவத்தையும், அதிகார துஷ்பிரயோகத்தையுங்காட்டுகிறதேயன்றி தாங்கள் சொல்லியபடி செய்யக் கூடியவர்களென்பதையும், தேச டிக்கனைப் பொருட்படுத்தக் கட்டுப்பட்டவர்களென்பதையுங் காட்ட வில்லையென்றே தெரிகிறது.

இவைகளுக்கெல்லாம் காரணமென்னவெனில், சுயராஜ்யக் கட்சியின் மாய வார்த்தைகளுக்கு ஜனங்கள் செவிசாய்த்ததும். அவர்களை நம்பி மகாத்மா காந்தியடிகளின் ஒத்துழையாமையியக்கத்தின் அடி மரத்திற்கு வெந்நீர் ஊற்றும் போது தடை செய்யாதிருந்ததும், நிர்மாணத் திட்டமாகிய தீண்டாமை யொழித்தல், மது விலக்கு, ஹிந்து முஸ்லீம் ஒற்றுமை, கதருடுத்தல் ஆகிய காரியங்களில் தீவிர முயற்சி செய்யாதிருந்ததும், இப்போது தேசத்தைப் படுகுழியில் தள்ளும் சட்டசபை எலெக்ஷனுக்கு சுயராஜ்யக் கட்சியாருக்கு ஓட்டுக் கொடுத்ததுமே யாகும்.

இனியாவது காங்கிரஸ் என்ற பேர் மாத்திரத்தில் ஏமாந்து போகாமல் ஸ்தல ஸ்தாபனங்களுக்கும், சட்ட சபைகளுக்கும், சொல்லியபடி நடக்கும் சுபாவமுள்ள உத்தமர்களுக்கு தங்கள் ஓட்டுகளைக் கொடுத்து வாயாடி வம்பர்களும், உத்தியோக ஆசையுடையவர்களும், சுய நல வாதிகளும் எந்தப் பொது ஸ்தாபனங்களுக்கும் முன்னிற்க முடியாமல் செய்தாலல்லது, காங்கிரஸ் மஹாசபையும், சட்ட சபைகளிலமர்வோர்களும் தேச மக்களை மதிக்க மாட்டார்களென்று கருதுகிறோம்.

---

## குறிப்பு.

### தாமதத்திற்குக் காரணம்.

கடந்த மூன்று வாரங்களாக "மித்திரன்" க்ஷேமநிதி லாட்டரிச் சீட்டு வேலை மிக நெருக்கடியாய் இருந்தமையால் மித்திரனைக் குறிப்பிட்ட தினத்தில் வெளியிடச் சற்றே தயக்கமேற்பட்டது. இனியும் அவ்விதத் தயக்கத்திற்கிடமின்றி மித்திரனை காலா காலத்தில் வெளியிடப் பிரயத்தனங்களெடுத்து வருவதால் சந்தாநேயர்கள் பொறுத்துக்கொள்ளுமாறு வணக்கமாய் வேண்டுகின்றோம்.

---

## அரிய வுரைகள்.

ஆயுட்காலமெல்லாம் அடிமைவாழ்வில் கழிப்பதைக்காட்டிலும் சுதந்திரத்துடன் குறைந்தது ஒருநாள் அல்லது ஒருமணி நேரமாவது வாழ்வது மேல்.

—அடிஸன்

எவ்வளவு சிறியவற்றையும் அற்பம், அர்பம என்று எண்ணாதே. சிறு மணலும் நானாவிர்த்தியில் பெருமலையாகும். விநாடிகள் பெருகியே ஆண்டுகளாகின்றன. சிறு முயற்சிகளும் பெரும் வாழ்க்கைக்கு ஏதுவாகும்.

—யங்.

ஒவ்வொரு மரமும் தன் இயற்கைக்குரிய பழத்தையே கொடுக்கிறது. நாம் எந்த விதையை விதைக்கிறோமோ அதன் பலனையே அறுவடைசெய்கிறோம். இவற்றைப்போலவே மனிதன் தன் செய்கைக்குரிய பயனையேதான் அனுபவிக்கிறான்.

—நெப்போலியன்

நீதியினிமித்தம் துன்பப்படுகிறவர்கள் பாக்கியவான்கள் பரலோகராஜ்யம் (மோட்சம்) அவர்களுடையது.

—கிறிஸ்துபெருமான்

நல்லமரமானது கெட்ட கனி கொடாது. கெட்டமரமானது நல்லகனி கொடாது. அந்தந்தமரம், அதனதன் கனியினால் அறியப்படும். முட்செடிகளில் அத்திப்பழங்களைப் பறிக்கிறதுமில்லை. நெருஞ்சிச் செடியில் திராட்சப் பழங்களைப் பறிக்கிறதுமில்லை. நல்லமனுஷன் தன் இருதயமாகிய நல்ல பொக்கிஷத்திலிருந்து நல்லதை எடுத்துக்காட்டுகிறான். பொல்லாத மனுஷன் தன் இருதயமாகிய பொல்லாத பொக்கிஷத்திலிருந்து பொல்லாததை எடுத்துக் காட்டுகிறான். இருதயத்தின் நிறைவினால் அவன் வாய்பேசும்.

—லூக்

ஏகாந்தமே நல்லகூட்டுறவு. கொஞ்சநேரமாவது தனித்திருப்பது மேலான இன்பத்தைத்தரும்.

—மில்டன்

மனிதனுடைய வாழ்க்கையாகிய சம்சாரக்கடலில் விவேகமாகிய அலையிருக்கிறது. அந்தக்கடலில் அகப்பட்ட மனிதன் அந்த அலையைப் பற்றினால் அதனால் முகதியாகிய கரைசேர்க்கப்பட்டு பேரின்பத்தையடைவான். அதைப் பற்றாதவன் அக்கடலிலேயே உழன்று துன்புறுவான்

—ஷேக்ஸ்பியர்

வார்த்தைகள் மரத்தின் இலைகளுக்குச் சமானமாயிருக்கின்றன. அவைகள் எங்குமிகுந்திருக்கின்றனவோ அங்கு அறிவு என்னும் பழம் அவைகளுக்கிடையில் தென்படுவது மிகவும் அருமை. (அதாவது இலைகளடர்ந்தவிடத்தில் பழம் தோற்றுவது அருமை. பேச்சு அதிகமாயிருக்கிறவிடத்தில் அறிவு விளக்கமாவது அருமை.)

—போப்

கடவுள் ஒரு வரிருக்கிறார் என்பதைத் தவிர வேறெதுவும் இந்த உலகில் நிச்சயமில்லை. நம்மைச்சுற்றி நடப்பவைகளெல்லாம் நிலையற்றவை. கடவுள் ஒருவரிருக்கிறாரென்பதுதான் நிலையான விஷயம். அவலாக்கனுவோர் பாக்யசாலிகள். அதையே என்னுடைய வாழ்வின் நோக்கமாக நான் வைத்துக் கொண்டுவிட்டேன்.

—மகாத்மா காந்தியடிகள்

ஸ்ரீரங்கத்தில் சுவாமி கோவிலை ஏழு சுவர்கள் தடுத்துக்கொண்டிருப்பதுபோல நம் தாயுடைய மக்களைப்பிரித்திருக்கும் ஜாதி உட்பிரிவு என்னும் சுவர்களை இடிக்கவேண்டும்.

—ஸர். கே. வி. ரெட்டி

தீண்டாமைக்கே தக்க காரணமாவது ஆதாரமாவதுஇல்லை அது மனிதத்தன்மையற்ற ஒரு முறை. அது அடியோடு ஒழியும் தருவாயிலிருக்கிறது. வைதீக கோஷ்டியினரொன்று கூறப்படுபவர்கள் அதை வெறும் பிருகபலத்தைக் கொண்டு நிறுத்தி வைக்கப் பார்க்கிறார்கள்.

—மகாத்மா காந்தியடிகள்

சுயமரியாதை யென்பதும் மானம் என்பதும் ஒன்றே. சுயமரியாதையற்ற மனிதர்கள் இருப்பதைவிட இறப்பதே மேல்

—ரே. சின்னையாபிள்ளை

இளைஞர்களால் தொடங்கப் பெறும் எந்த இயக்கமும் அதன் நோக்கத்தில் வெற்றியடையுமென்பதில ஐயமில்லை. இன்று அயர்லாந்து, எகிப்து, ருஷியா துருக்கி, ஜெர்மனி முதலிய நாடுகள் விடுதலை பெற்று சிறப்புடன் வாழ்வதற்குக் காரணம் அந்நாட்டு இளைஞர்களே!

பொறையார் ஸ்ரீ கனகசபை

—நாடார்

பெரியோர்களே! நீங்கள் பொது நலத்தில் ஈடுபட்டுழைக்காவிட்டாலும் உங்கள் பிள்ளைகள் செய்யும் வேலையைத் தடைசெய்யாதீர்கள். நீங்கள் இதுவரையிலும் கடைப்பிடித்து ஒழுகிவந்த குருட்டுக் கொள்கைகளை அவர்களுக்குப் போதிக்காதீர்கள். காலச் சக்கரம் சுழன்று கொண்டிருக்கும் போது குருட்டு—மூட—வைதீக— கொடுமைகளில் இனி உங்கள் பிள்ளைகள் ஈடுபடப் போவதில்லை.

—ஷியார்

Tamil Heritage Foundation International Digital Library EBook collection

# உள்ளதைச் சொல்லிக் கெட்ட பண்டாரம்.

[முன் தொடர்ச்சி.]

"யதார்த்த வாதி குருமார் விரோதி" என்று பழமொழி ஏற்பட்டிருக்கவில்லையே, பின்னை ஏன் யதார்த்த வாதியாகிய இயேசுகிறிஸ்துவை அக்காலத்து குருமார் விரோதித்துக் கொன்றார்கள் என்றும், இக்காலத்திலும் குருமார்களால் சிலர் நியாயமும் உண்மையுமான விஷயங்களின் பொருட்டு விரோதிக்கப்படுதல் என்னே என்றும் ஆச்சரியத்துடன் நமது வியாசம் முடிவுபெற்று நின்றது. அவ்விதமானால் குருமார் யாவரும் யதார்த்த விரோதிகள் என்றும், சபையார் எல்லாரும் யதார்த்த வாதிகள் என்றுமா சொல்லுவோம்? அல்ல. சபையாருள் ஒழுங்கீனர்கள் இருப்பது போலவே குருமாருள்ளும் ஒழுங்கீனர் இருக்கிறார்கள் என்பதே எமது கருத்தாகும்.

மிஷன் வேலைக்காரருக்குச் சம்பளம் பட்டுவாடா செய்யும்படி மிஷனெரியிடம் வாங்கிக் கொண்டு வந்த ஆயிரம் ரூபாயைக் கள்ளர் அடித்துக்கொண்டு போய் விட்டார்களென்று சொல்லி தெடி பணத்தைச் சுயப்பிரயோஜனத்துக்கெடுத்துக்கொண்டு வேலையினின் றும் நீக்கப்பட்ட சபையாளும் நமக்குள் இருப்பது போலவே ஆலயக் கட்டு மானத்துக்கென்று வாங்கிக்கொண்டு போன ஆயிரம் ரூபாயையும் கள்ளர் வழியில் அடித்துக் கொண்டு போய் விட்டார்களென்று கதை கட்டி போலீஸாரால் கண்டுபிடிக்கப்பட்டு மிஷன் அதிகாரிகளால் வேலையினின்றும் நீக்கப்பட்டு திரும்பவும் வேலை பார்க்கும்படியாய் அனுமதிக்கப்பட்டுள்ள குருவானவரும் நம் மத்தியில் நாளும் இருந்து வராமலில்லை.

சதாபொய்யான ரிப்போர்ட்டுகளையே மிஷனெரிகளுக்கு எழுதிய வழக்கப்படி நைரிப்புடன் கோர்ட்டில் பொய் சாக்ஷி சொல்லி அதற்காக ஓர் ஹிந்துவான சப்ஜட்ஜால் பிராசிக்கியூஷன் செய்யப்பட்ட குருவானவர் நமக்குண்டாயிருப்பதுபோலவே பொய் வழக்கிட்டுப் பொய்ச் சாக்ஷி சொல்லிக் காலந்தள்ளும் சபையாரும் நமக்குண்டுதான். ஜனங்கள் தவறு செய்தால் குருமார்கள் அவர்களைக் கண்டிப்பார்கள். குருமார் தவறு செய்தால் அவர்களை யார் கண்டிக்க? இயேசுவானவர் நான் ஊழியம் கொள்ள வரவில்லை; ஊழியம் செய்ய வந்தேன் என்று சொன்னதுபோல இக்காலத்திய குருமார்களும் தம் சபையிலுள்ள பணக்காரர்களும் படித்தவர்களுமான செல்வர்களுக்கு சபையாருக்கு நல்ல ஊழியம் செய்துதான் வருகிறார்கள். இத்தகைய அந்தஸ்துள்ள ஒரு சபையார் வெளியூரில் உத்தியோகத்தின் பொருட்டு குடியிருப்பரேல் அவருக்கு வீடு கட்டுவதிலோ அவருடைய கொடுக்கல் வாங்கல்களைக் கவனிப்பதிலோ குருமாரும், உபாத்தியாயர்களும் உபதேசியார்களும் மிகச் சிரத்தையுடன் ஈடுபட்டு ஊழியம் செய்து ஒருவாறு தங்கள் எஜமானுடைய போதனையை நிறைவேற்றிவைக்கிறார்கள். என்றாலும் கும்பகர்ணன் பார்வைக்கு ராவணன் வீட்டில் தேவாதிகள் ஊழியம் செய்து வந்ததற்கும் இவ்வித ஊழியத்திற்கும் அதிக வித்தியாசம் தோன்றுவதாயில்லை. மேலும் இவ்வித பணக்காரரான சபையாருக்கும், எளியரான சபையாருக்கும் விவகாரம் ஏற்பட்டுவிட்டால் குருவானவரும் மற்றும் சிப்பந்திகளும் பணக்காரருடைய கக்ஷியை ஆதரிப்பதில் ஒருபோதும் தயங்குவதில்லை. எளியவன் நிலத்தை வலியவன் எடுத்துக் கொண்டால் வலியவனைக் கண்டிக்கும் சுபாவமாவது, அனுதாபமாவது குருமாரிடம் காண்பதற்கில்லை. எளியவனே வேறு பல விதத்திலும் துன்பத்திற்காளாகிறான். பெரிய சபையார் வீட்டில் மரணம் ஏற்பட்டால் குரு, குருவின் மனைவி, பிள்ளைகள் எல்லாரும் வந்து சகல காரியங்களை

யும் நிறைவேற்றிவைப்பர். எளியவன் வீட்டில் யார் இறந்தாலும் அந்த ஊரிலுள்ள ஏழை உபாத்தியாயருக்கு அவ்விஷயம் விட்டுவிடப்படுகிறது. குடிவெறியால் பிரசித்தம் பெற்ற சபையாரும் வாய் மதமாய் யாரையும் தூஷணிக்கும் இயல்புடையாரும் குருக்களால் போற்றப்பட்டு புதிய மெம்பர் ஸ்தானத்திற்கு ஆளாகிறார்கள். அவர்களுடைய பெண்களுக்கு பயின் ஊமென் வேலையும் பிள்ளைகளுக்கு உள்ளூரிலேயே உயர்ந்த சம்பளத்தில் வசதியும் வேலைகளும் கொடுக்கப்படுகிறது. ஒழுங்கும் மேன்மையும் உள்ளவனுடைய பிள்ளைகளோ ஒருவரும் போக மாட்டேனென்று மறுக்கும் தூரமான இடங்களுக்கு மாற்றப்படுவார்கள். மரியாதைக்காரருக்கு மண்ணும் சோறும்; திருத்தனக்காரனுக்குத் தயிரும் சோறும் என்பதுதான் தற்கால குருவாட்சியில் வெளிப்படையில் விளங்கும் குறிப்பாயிருக்கிறது. இயேசுவானவர் காலத்தின் குருவாட்சி இத்தகைய நிலைமையில்தான் இருந்தது. எளியவர்கள் என்றைக்கும் மறக்கப்படுவதில்லை யென்பதே அவரது வேதம். இக்காலின் குருக்களோ எளியவனை என்றைக்கும் மறந்துவிடுவோம் என்பார்போல் விளங்குகின்றனர். ஏழைபங்காளனாய் வந்த இயேசு பெருமானின் சித்தை யென்பதும் இதுதானோ? வலியாருடன் சேர்ந்து எளியாரைத் துன்புறுத்துவது தான் அப்புண்ணியனின் செயலா? இயேசுவின் சாயலில் விளங்குவதாய்க் கொண்டாடப்படும் மகாத்மா காந்தியடிகள் 3-வது வகுப்பு ரெயிலில் பிரயாணம் செய்ததேன்? கேட்டாவில் முனிசிபல் ரோட்டில் ஓர் கைதியாக நின்று கல் உடைத்ததேன்? அவரோடு படித்தவர்கள் பலர் நல்ல உத்தியோகம் பெற்று சகல ஆடம்பரத்துடனும் வாழவில்லையா? எளியவர்களுக்கும், ஆதரவற்றவர்களுக்கும் உதவி செய்ய வந்த இயேசுவின அடியார் தமது நடையைச் சிறிது சிந்தனை செய்வாராக.

ஓர் கிறிஸ்தவன்.

[தொடரும்.]

## பால்ய நாடார் சங்கம், பாலமேடு.

20—5-27 இரவு சுமார் $8\frac{1}{2}$ மணிக்கு ஸ்ரீ பத்திரகாளியம்மன் கோவில் சிங்காரப் பேட்டையில் சங்கம் ஸ்ரீமான் வீ. அ. அதிவீரநாடார் அவர்கள் அக்கிராசனத்தின் கீழ் நடைபெற்றது. அவ்வமயம் சுமார் 30 பேர்வரையில் விஜயம் செய்திருந்தனர். ஸ்ரீமான் சொக்கலிங்கபாண்டியர் "கடவுள் வணக்கம்" கூறினர். மாரிமுத்துப் பாண்டியன் "நற்செய்கை" என்பதைப்பற்றியும், எஸ். ரத்தினம், முத்தையா என்னும் இரு மாணவர்களும்முறையே "கல்வி" "சரீர சுகபோஷணம்" என்பவைபற்றியும்பேசினார்கள். ஸ்ரீமான் எம். எஸ். பி. சௌந்தரபாண்டிய நாடார் "பீடியும், அதன் கெடுதல்களும்" என்பதைப் பற்றியும் ஸ்ரீமான் எஸ். சங்கரலிங்க நாடார் "எல்லாம் தெய்வச் செயல்" என்பதைப்பற்றியும் பேசி கடவுள் வணக்கம் பாட கூட்டம் இனிது கலைந்தது என்று ஸ்ரீமான் வீ. அ. அதிவீர நாடார் எழுதுகிறார்.

# அகில இந்திய காங்கிரஸ் கமிட்டியின் தீர்மானங்கள்.

### (1) மகாத்மாவைப்பாராட்டல்.

மகாத்மா கூடிய சீக்கிரத்தில் குணமடைந்து இந்தியாவுக்கும் உலகத்துக்கும் அவர் செய்துவரும் வேலையை ஆரம்பித்துக் கொள்ள வேண்டுமெனப் பிரார்த்திக்கிறது.

### (2) வகுப்புத் திட்டம்.

இனி சட்டசபை பிரதிநிதித்துவ விஷயத்தில் கலப்புத்தொகுதி ஏற்பட வேண்டும்.

இரண்டு பெரிய வகுப்பினருக்கும் அவர்களின் உரிமை பாதுகாக்கப்படுமென உறுதி கூறுவதற்கு தற்காலிகமாக, வேண்டுமானால் அந்தந்த மாகாணத்தொகைக்கேற்ப ஸ்தானங்கள் ஒதுக்கிவைக்கப்படலாம். இந்தியா சட்டசபையில் சமரஸமாகக் கலந்து சில ஸ்தாபனங்கள் ஒதுக்கிவைக்கப்படலாம்.

(அ) நியாய விசாரணை முதலிய விஷயங்களில்மட்டும் வடமேற்கு எல்லைப்புற மாகாணத்திலும் பெலுசிஸ்தானத்திலும் மற்ற மகாணங்களுக்களிக்கப்பட்டுள்ள சுதந்தரத்தை அளிக்கவேண்டுமென முஸ்லீம் தலைவர்கள் கேட்பது நியாயமாகவே இருக்கிறது.

(ஆ) பம்பாய் மாகாணத்தினின்றும் இந்தப் பிரதேசத்தைப் பிரிப்பது சம்பந்தமாகக் காங்கிரஸ் முன்னமே பாஷாவாரியாகப் பிரிப்பதை ஒப்புக்கொண்டிருப்பதால் இப்போது அதை அநுஷ்டானத்துக்குக் கொண்டுவர வேண்டியதுதான் பாக்கி.

இனி அவரவர்களிஷ்டப்படி தெய்வந் தொழவும் மதபோதனைக்கு ஏற்பாடு செய்யவும் வேண்டும். எந்த சட்டசபையும் சட்டஞ்செய்து இதைப் பாதிக்கக்கூடாது. மற்றவர்களுக்குள்ள உரிமையைப் பழிக்காமல் அவரவர்கள் தங்கள் தங்கள் மதப்பிரசாரத்தை நடத்திக்கொள்ள உரிமை இருக்க வேண்டும்.

வகுப்புப் பிரச்னை சம்பந்தமான விஷயங்கள் சட்டசபைகளில் விவாதிக்கப்படுகையில் எந்த வகுப்பைச் சேர்ந்த அங்கத்தினர்களாவது முக்கால் பாகத்தினர் அந்த மசோதாவை எதிர்த்தாலும் சரி, அல்லது தீர்மானத்தை எதிர்த்தாலும் சரி, அவ்வித மசோதாவையோ தீர்மானத்தையோ சபையில் கொண்டு வரக்கூடாது. வகுப்புப் பிரச்னை சம்பந்தமான விஷயமென்றால் சட்டசபை அமைக்கப்பட்டவுடனே முதலில் ஹிந்து முஸ்லீம் அங்கத்தினர்கள் அடங்கிய ஒரு கமிட்டி நியமிக்கப்பட்டு அவர்கள் ஒன்றுபட்டு வெளியிடும் அபிப்பிராயங்களேயாம்.

### (3) அரசியல்திட்டம்.

இந்தியா சட்டசபையிலும் மாகாண சட்ட சபையிலுமிருக்கும் அங்கத்தினர்களையும் இதர ராஜீயக் கட்சித் தலைவர்களையும் காரியக்கமிட்டியார் கலந்துகொண்டு ஒரு அரசியல் சுயராஜ்ய அமைப்பைத் தயாரித்து அதை அகில இந்தியகாங்கிரஸ் கமிட்டியின் கூட்டமொன்றில் அங்கீகாரத்திற்காக ஆஜர் செய்ய வேண்டுமென்ற தீர்மானம் காரியக்கமிட்டியின் தீர்மானமாக அகில இந்தியக் கமிட்டியின் முன் கொண்டுவரப்படும்.

### (4) பண்டிதஜவாஹிரிலாலின் வேலை.

ஒடுக்கப்பட்ட தேசங்களின் பிரதிநிதிகள் மகாநாட்டில் இந்தியாவின் பிரதிநிதியாகவிருந்த பண்டித ஜவாஹிரிலால் நேரு அனுப்பிய ரிப்போர்ட்டை அங்கீகரிப்பதுடன் அவரது ஊழியத்தையும் ... பாராட்டுகிறது.

### (5) தொழிற்சங்கங்கள்.

கிராமாந்திரங்களிலும் நகரங்களிலும் தொழிற் சங்கங்களை ஏற்படுத்த வேண்டும். அவ்வேலைக்கு நிர்மாணிகர்களையும் ஏற்படுத்தவேண்டும்.

### (6) சீனவுக்குப்படை.

சீனவுக்கு இந்தியப் படைகளை அனுப்பியதற்காக இந்தியா கவர்ன்மெண்டைக் கண்டிக்கிறது. படைகளை உடனே திருப்பி அழைத்துக் கொள்ள வேண்டும்.

7. ஹிந்துஸ்தானி சேவாதளத்தார் சீனவுக்கு ஆபத் சகாயப்படையனுப்பத் தீர்மானித்திருப்பதைப் பாராட்டுகிறதுடன அதற்கு ஆதரவு அளிக்க வேண்டுமென்று இந்நாட்டாரை வேண்டிக் கொள்கிறது.

### (8) சென்னைத் தொழிலாளர்.

சென்னையில் மண்ணெண்ணெய்த் தொழிலாளர் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்த விஷயமாக நடவடிக்கையெடுத்துக் கொள்ள கவர்ன்மெண்டுக்கு அறிவிக்கிறது. இது சம்பந்தமாகச் சென்னை சட்டசபை அங்கத்தினர்கள் சட்டமறுப்பு செய்ய வேண்டும்.

### (9) பிரிட்டிஷ் தொழிற்சங்க மசோதா.

இங்கிலாந்தில் கன்சர்வேடிவ் கட்சியினரால் பார்லிமெண்டில் நிறைவேற்றக்கொண்டுவரப் பெற்றிருக்கும் தொழிற் சங்க மசோதாவைக் கண்டிக்கிறது.

10. காகோரி கைதிகளைக் கேவலமாக நடத்துவதைக் கண்டிப்பதோடு அவர்களை ராஜீயச் சிறையாளரைப் போல் நடத்தவேண்டுமெனக் கோருகிறது.

### (11) நாகபுரி சத்தியாக்கிரகம்.

நாகபுரி சத்தியாக்கிரக நிலைமையை பிரதிநிதிகள் சென்று அறிந்து வரவேண்டும். காரியககமிட்டியார் அதற்காகப் பணவசூல் செய்ய வேண்டும்.

### (12) சென்னை சுயராஜ்யக் கட்சியார் செய்கை.

சென்னை சட்டசபையிலுள்ள சுயராஜ்யக் கட்சியினர் மந்திரிசபையை ஒழிக்கச் சந்தர்ப்பம் நேர்ந்தும் அதைக் கைவிட்டதற்குச் சமாதானம் கூறும்படி காரியக்கமிட்டியார் அவர்களைக் கேட்டு அடுத்த கமிட்டிக் கூட்டத்தில் அவர்களின் சமாதான விவரத்தை ஆஜர் செய்யவேண்டும்.

### (13) வங்காளராஜீயசிறையாளர்.

வங்காளச் சிறையாளரை விடுவிக்கும்படி கவர்ன்மெண்டாரை வற்புறுத்தப் பிரிட்டிஷ் சரக்கு பஹிஷ்காரமே தக்கமுறை யாதலால் அந்த இயக்கத்தை ஆரம்பிக்கவேண்டும்.

## தமிழ் புக் கீப்பிங்

விலை ரூபாய் 1.

கணக்குவைக்கும் முறையை நன்கு போதிப்பது. ஒற்றைப் பதிவு, இரட்டைப் பதிவு இரண்டு பாகங்களு மடங்கியிருக்கின்றன. அனேக வியாபார இரகசியங்களையு முடையது வியாபாரிகள், மாணுக்கர்கள், கம்பெனி உத்தியோகஸ்தர்கள் எல்லோருக்கும் அவசியம்.

கே. ஆறுமுகஞ் செட்டி, ...

Tamil Heritage Foundation International Digital Library EBook collection

# பிறப்பால் உயர்வு தாழ்வு

## செயற்கையன்றி இயற்கையல்ல.

### சுத்த சன்மார்க்க புத்த மதத்தைக் கவிழ்த்தியவர் பார்ப்பனர்களே !

### பிராமணர்மட்டுமல்ல, பிராமணரல்லாதாரும் தீண்டாமையைக் கையாடியே வருகிறார்கள்.

[மாயவரத்தில் கூடிய சமரச சன்மார்க்க மகாநாட்டில் ஸ்ரீமான் திரு. வி. கலியாணசுந்தர முதலியாரவர்களின் அக்கிராசனப் பிரசங்கம்.]

(முன் தொடர்பு.)

**நமது நாடு.**

நமது நாட்டில் உலகியற்றுறைகளும் உயிரியற்றுறைகளும் செம்மை நெறியில் இயங்கு முறையில் மக்கள் இயற்கை வாழ்வு நடாத்திவந்தார்கள். வந்த நாளில் நாடு செழுமையுற்றிருந்தது. எங்கணும் இயற்கை யறம்; எங்கணுஞ் சன்மார்க்கம்.

பின்னை நாளடைவில் பாரத மாதாவின் முடிபுங்கலையும் செழுமையும் கொழுமையும் வளனும் நலனும் பிறவும் மெல்ல மெல்ல நெகிழ்ந்து நெகிழ்ந்து சுருங்கிச் சுருங்கி இமையாவயின. இந்நாளில் பாரதத்தாய் அடிமைக்குழியில் வீழ்ந்து கிடக்கின்றாள். இச்சிறுமைக்குக் காரணமென்னை ?

வாழ்விற்கென ஏற்பட்ட தொழின் முறைகளை நடாதிவந்த மக்களுக்குள் பிறப்பில் ஏற்றத் தாழ்வு புகுந்தமையே சிறந்த காரணம். தொழிற்பிரிவுகள் பிறப்புப் பிரிவுகளாக மாறின. இப்பிறப்பு வழி ஏற்பட்ட பிரிவுகள் இயற்கைக்கு மாறுபட்டன வாகலான், அந்நாள் தொட்டு மக்கள் சன்மார்க்கமெனும் இயற்கை வாழ்வினின்றும் பிறழ்ந்து, துன்மார்க்கமெனுஞ் செயற்கையில் வீழலானார்கள். இப்பிறழ்ச்சியால் பார்ப்பனன் பிள்ளை பார்ப்பனனாகவும், அரசன் பிள்ளை அரசனாகவும், வாணிபன் பிள்ளை வாணிபனாகவும், தொழிலாளன் பிள்ளை தொழிலாளனாகவும் கருதப்பட்டனர்.

ஆசிரியத் தொழில் பூண்டிருந்தோர் அரசர்களைத் தம் வயப்படுத்தித் தம்வழி உலக மியங்க வேண்டுமெனும் எண்ணங்கொண்டு முயன்று வந்த வேளையில், இடபதேவர், மஹாவீரர், புத்தர் முதலிய அருளாளர் தோன்றிப் பிறப்பால் வகுப்புவேற்றுமை கூடாது என்று எதிர்த்து வந்தனர். இம்முயற்சியில் புத்தர் பெருமான் வெற்றியும் பெற்றார். மீண்டும் நாடு சன்மார்க்கமெனும் இயற்கை அற நெறியில் இயங்கலாயிற்று. அவ்வியக்கத்தைத் தவிடாக்க பார்ப்பனர் சிறு முயற்சியால் தலைத்து வந்தனர். நாளுக்கு நாள் புத்தர் பெருமான் அறவுரை ஆக்கம் பெற்று வருவது கண்ட பார்ப்பனத் தலைவர் சிலர், பௌத்த சமயம் புகுந்து பௌத்த சமய ஆக்கத்தையே மாய்த்தனர். அன்று மீண்டும் எழுந்த பார்ப்பனர் பின்னை நாளில் தமக்கு எத்தகைய இடையூறும் நேராதவாறு எவ்வக் கோட்டைகள் கட்டவேண்டுமோ அவ்வக்கோட்டைகள் கட்டிக்கொண்டனர். பௌத்தமதக் கிளர்ச்சி தோன்றாதிருக்குமேல் பார்ப்பனர் தமது நலன் கருதி இத்துணை அரண்களை கோலியிருக்க மாட்டார். அச்சமேலீட்டான் அவர் இயற்கைக்கு மாறுபட்ட பல துறைகள் வகுத்தனர். பாவம் !

முதல் முதல் பெண்மக்களும் தொழிலாளர்களும் கல்வி கற்றலாகாது என்னுஞ் சட்டஞ் செய்யப்பட்டது. கல்வியிலா மக்கள் விலங்காதல் இயல்பன்றோ ? பெண் மக்கள் அருள்பூத்த நெஞ்சினராகலான், தங்கள் (பார்ப்பனர்கள்) கொடுமை கண்டு பொருது, அறக்கிளர்ச்சிக்குத் துணை நிற்பரெனக் கருதி அவர்கட்கு (பெண்மக்கட்கு) கல்வி மறுக்கப்பட்டது. வேதகாலத்தில் பெண் மக்கள் பலர் பெரும் பண்டிதைமாராக விருந்தனர். ஸ்மிருதியில் பெண் கல்வி மறுப்பு காணப்படுகிறது. ஸ்மிருதிகள் புத்தர் காலத்திற்குப் பின்னரே எழுதப்பட்டன. இதனால் வேண்டுமென்றே பெண் கல்வி மறுக்கப்பட்டது கவனிக்கத் தக்கது.

தொழிலாளர் தொகையில் பெரும்பான்மையோராக விருத்தலான், அவர் கற்றவராயிருப்பின், புத்தர் அறக்கிளர்ச்சி போன்றதொரு கிளர்ச்சி எழுமேல், அதற்கு அவர் துணை புரிவரென்றஞ்சி, அவர் கல்வி கற்றலாகாது என்னும் விதி செய்யப்பட்டது. பின்னும் நாளடைவில் மேல் வகுப்பார் தம்மைக் கடவுளர் என்று மற்ற வகுப்பார் கருதித் தமக்கு ஏவல் செய்யுமாறு பல விதிகள் நிறுவினர். உயர்வகுப்பார் பிறப்புரிமை பழைய நூல்களினிடையே செருகப்பட்டது. அப்பிறப்புரிமை காப்புக்கெனக் கோயில்கள் மடங்கள் கட்டப்பட்டன. உயர் வகுப்பார்க்குள்ள உரிமைகளையும், மற்றவர்க்குள்ள சிறுமைகளையும் ஸ்மிருதிகளில் இன்னுங் காணலாம்.

இக்கொடுஞ்சட்டங்கள் நந்தமிழ் நாட்டில் தலைகாட்டியபோது, அப்பொழுது தமிழ்நாட்டில் வதிந்த திருவள்ளுவனார் முதலியோர் "பிறப்பொக்கும் எல்லாவுயிர்க்கும் சிறப்பொவ்வா செய்தொழில் வேற்றுமையான்" என்று பிறப்புரிமைக் கொடுமையைக் கடிந்தனர். அவர் கடிந்தும் பிறப்பில் உயர்வு தாழ்வு கருதும் முறையாண்டும் பரவலாயிற்று. நாட்டின் பெரும் பான்மையோர் கல்வியிழந்தமையால் அம்முறைக்கு அடிமையாயினர். என் செய்வது !

நான்கு விதத் தொழில்கட்கும் நான்கு வித சாதியிருத்தல் வேண்டுமென்றும், இல்லையேல் உலகம் நடைபெறாதென்றும் சிலர் வாதமிடுகிறார்; மக்கள் பிரிந்து நான்குவித தொழிலையும் நிகழ்த்த வேண்டுமென்பதை யான் மறுக்கின்றேனில்லை. அப்பிரிவு பிறப்பு வழியில் இருத்தல் இயற்கைக்கு மாறுபாடு என்பது எனது உள்ளக்கிடக்கை. உலகில் எங்கணும் நான்குவித முறைகளிருக்கின்றன. யாண்டாதல் பிறப்பில் உயர்வு தாழ்வு கருதப்படுதலுண்டோ ? சிறப்பில உயர் தாழ்வு உறல் இயல்பு. இவ்விந்திய நாட்டில் ஹிந்துக்களிடை மட்டும் பிறப்பில் சாதி கொள்ளப்பட்டு வருகிறது. அவ்வாறு கொள்ளாத நாடுகள் அழிந்துபட்டனவோ ? படுகின்றனவோ ? அவைகள் யாவும் உரிமையின்பத்தைச் செவ்வனே நுகர்ந்து வருகின்றன. பிறப்பால் சாதிகொண்டு உயர்வு தாழ்வு கணிக்கும் இந்தியாவோ அடிமைக் குழியில் வீழ்ந்து தவிக்கிறது.

நாளடைவில் நால்வகை சாதி நாலு லட்சம் சாதிகளாய் விட்டன. சாதிக்குள் சாதியாகவும் கிளைக்குள் கிளையாகவும் சாதிக் குப்பைகள் பெருகிவிட்டன. நாடெங்கும் சாதி நாற்றமே வீசுகிறது.

நமது நாட்டார் பெண்ணுரிமை கடிந்த தீவினையும், பிறப்பால சாதி வகுத்த தீவினையும், மக்களுள் தீண்டாமை கொண்ட தீவினையும் இப்பொழுது மூண்டெழுந்து நாட்டை அரிக்கின்றன; எரிக்கின்றன.

**நமது கடமை.**

முதலாவது நம்முன்னோர்கள் செய்த தவறுதலுக்கு கழுவாய் பிராமணர் மட்டும் தேட வேண்டுமென்னும் நியதியில்லை. பிராமணரல்லாத மற்றவர்களும் கழுவாய் தேடக் கடமைப்படல் வேண்டும். பிராமணர்கள் மற்றவர்களைச் சிறுமைப்படுத்தியதுபோல மற்ற சாதியார்களும் ஒடுக்கப்பட்டவர்களைச் சிறுமைப்படுத்தி வருகிறார்கள். எல்லாரும் பெண்மக்களை வருத்துகிறார். ஆதலால் அனைவரும் தத்தங் குற்ற முணர்ந்து கழுவாய் தேடுவாராக. ஹிந்துக்களென்று இந்நாளில் கருதிக் கொள்வோர் அனைவரும் நாடோறும் காலை மாலை இரண்டு வேளைகளிலும் ஆண்டவனை நோக்கி, வழி வழி நிகழ்ந்து வரூஉம் குற்றங்களை மன்னிக்குமாறு கேட்பாராக; கேட்குமளவோடு நில்லாது திங்கட்கொருமுறை நோன்பு மிருப்பாராக.

**பெண்ணுலகு.**

ஆண்மகன் இரண்டு மூன்று பெண்களை மணஞ்செய்து கொள்வதும், பெண் மகள் உற்ற வயதடையா முன்னர் அவளைத் திருமணஞ்செய்து கொடுப்பதும், பெண்மகள் இளமையில் கைம்மை எய்தினால் வேறு களைகணின்றி, நடுவிடை வீழ்ந்து வருந்துவதும். இன்னோரன்ன பிற நிகழ்ச்சிகளும் எத்தகைக் கொடுமைகள் ! அன்பர்களே ! உன்னுங்கள்; வழுக்கி வீழ்ந்த சகோதரிகள் நிலையை நினைக்கும்போது கண்ணீர் பெருகுகிறது. எல்லாத்துறைகட்கும் சாதி ஏற்பட்டது போல விபசாரத்துக்கெனவும் ஒரு சாதி நாட்டில் ஏற்பட்டிருக்கிறது. என்ன இழிவு ! என்ன இழிவு !. ஒருவன் ஒருத்தியுடனும் ஒருத்தி ஒருவனுடனும் வாழும் முறை ஏற்படல் வேண்டும்.

**பிறப்பால் சாதி**

பிறப்பால் உயர்வு தாழ்வு கருதுவதைத் தொலைத்தல் வேண்டும்.

பிறப்பு வழி உயர்வு கருதி எவரையுங் குருவாகக் கோடலாகாது. கல்வியறிவு ஒழுக்கமுடைய ஒருவன் எவனாயினும் அவனைக் குருவாகக் கொள்ளும் பயிற்சி முதிரல் வேண்டும்.

பிறப்பால் உயர்வு கருதி, எவருக்கும் வந்தனை வழிபாடுகள் நிகழ்த்தவே கூடாது.

**தீண்டாமை விலக்கல்.**

மக்களுக்குள் தீண்டாமை வகுத்ததினுங் கொடுமை பிறிதொன்றில்லை. அஃதொரு பெருநோயாய்ப் பாரதமாதாவைப் பிணித்திருக்கிறது. சிலர் தன்னலங் கருதி ஒருபோழ்து கொண்ட முறைகள் இப்பொழுது நாட்டையே அரிக்கின்றன. தீண்டாமையால் நாட்டுக்கு நேர்ந்துள்ள இடுக்கண்களை யுணர்ந்தும் இன்னும் நம்மவர்கள் அந்நோயைப் போக்கிக் கொள்ள மனங்கொள்கிறார்களில்லை. தீண்டாமைக்குற்றம் பிராமணரிடத்தில் மட்டுமில்லை; பிராமணரல்லாதார்பாலும் அக்குற்றமுண்டு. தீண்டாமையில் பிராமணரினும் பிடிவாதமாகச் சில பிராமணரல்லாதாரிருத்தல் எனக்குத் தெரியும்.

பிராமணரல்லாதார் பிராமணருடன் கலக்க முயல்வது போலத் தீண்டாதார் என்று சொல்லப்படும் மக்கள் தம்முடன் கலக்கப்பிராமணரல்லாதார் இடந்தரல்வேண்டும். அந்நல்லெண்ணம் பிராமணரல்லாதாரிடத்தில் வேரூன்றினால். அவர் முயற்சிக்கு ஆண்டவன் துணை கிடைக்கும். தீண்டாமை போக்கப் பிராமணரும் மற்றவரும் எல்லாரும் முயல்வாராக.

தீண்டாமை போக்க முன்னைநாளில் சில அன்பர்கள் முயன்றார்கள்; இந்நாளில் காந்தியடிகள் முயன்று வருகிறார். இப்பெரியோர்கள் சொல்வழி நின்று கடனாற்றச் சாதிக்கூட்டத்தார் ஒருப்படுகிறாரில்லை; அப்பெரியோர் திருவுருவப்படங்களைப் பூசிக்கவும், திருவிழா செய்யவும் ஒருப்படுகிறார். தீண்டாமையைவிட நம்மவர்கள் நடுக்குகிறார்கள்.

வாய் சீர்திருத்தம், வாய்வேதாந்தம் இவைகளால் பயனில்லை. தீண்டாமை உன்னும் மனோநிலை மாறுதல்வேண்டும், சாதியுடையார் சாதியில்லாத ஆதிதிராவிடர் முதலியோரிடம் நன்றாகப் பழகல்வேண்டும். அப்பழக்கத்தால் வேற்றுமை யொழியும். சாதியில்லாத ஆதிதிராவிடர்களிற் கல்வி யறிவு ஒழுக்கமுடையாரைக்கொண்டு சில தெய்வவினைகளும் நிகழ்த்தல் வேண்டும்.

**கோயில்கள்.**

சத்தெனுஞ் செம்பொருளை உன்னுதற்கும் போற்றுதற்கு முரிய இடமாகக் கோயில்கள் கட்டப்பட்டன. நாளடைவில் அக்கோயில்களிலும் சாதிப்பேய் நுழைந்துவிட்டது. ஒரு கூட்டத்தார் இங்கும், இன்னொருகூட்டத்தார் அங்கும் நின்று கடவுளை வழிபடவேண்டுமாம். கடவுள் முன்னிலையிலுமா உயர்வு தாழ்வு ? கடவுளை மரம் செடி கொடி பாம்பு சிலந்தி யானை முதலியன பூசித்ததாகப் புராணங்கள் புகல்கின்றன. கடவுள் உருவங்களின்மீது ஈக்கள் மொய்க்கின்றன; பல்லிகள் ஓடுகின்றன. இவைகட்கெல்லாம் இறைவனைத் தொடும் உரிமையிருக்கும்போது ஆறறிவுடைய மனிதனுக்கு அவ்வுரிமையில்லை ? சாதியார் கொடுமை என்னே ! என்னே !!

கோயில்களை எப்படித் திருத்துவது ? இரண்டு வழிகள் குறிக்கலாம். ஒன்று சாதிக் கோயில்களுக்குப் போகாமலிருப்பது; மற்றொன்று சத்தியாக்கிரஹத்தால் மக்களுரிமை நிலை நாட்டுவது.

**மடங்கள்.**

பௌத்த சமயத்துக்குப் பின்னரே மடங்கள் ஏற்பட்டன. சமயஞானத்தை வளர்ப்பது மடங்களின் நோக்கம். ஒருபற்றுமில்லாத சந்நியாசிகளே மடாதிபதிகளாக அமர்கிறார்கள். சந்நியாசிகளைத் தலைமைகொண்ட மடங்களிலும் சாதிப்பேய் புகுந்திருக்கிறது.

மடங்களையும் மடாதிபதிகளையும் குறைகூற வேண்டுமென்பது எனது நோக்கமன்று. நீண்ட நாட் பழக்கவொழுக்கத்துக்கு மடங்களும் மடாதிபதிகளும் அடிமைப்பட நேர்ந்திருப்பதொன்றையே ஈண்டு குறிப்பிடுகிறேன். யாண்டாயினுமுள்ள ஒருமடாதிபதி நாட்டு நிலை சமய நிலை முதலியவற்றை எண்ணிச் சமரசத்தை வளர்க்கப் புறப்படுவரேல் அவரைத் தெய்வம் போலப் போற்றுவேன். காலதேச வர்த்தமானத்துக் கேற்றவாறு முறைகளை மாற்றுவதால் தீவரு நேரிடாது; நலனே உறும். மடங்களையும் மடாதிபதிகளையும் ஒழுங்குபடுத்தும் ஆற்றல் பொதுமக்கட்குண்டு. சத்தியாக்கிரகம் சிறந்த கருவி என்று சொல்லவேண்டுவதில்லை.

**பிராமணர் பிராமணரல்லாதார்.**

இப்பொழுது தென்னாட்டில் பிராமணர் பிராமணரல்லாதார் பிணக்கு யாண்டுமிருத்தல் உண்டு. இப்பிணக்கு தொடக்கத்தில் அரசியலையொட்டி எழுந்தது. இப்பொழுது அது சமூகத்தில் குடியேறிவிட்டது. அதனால் விளைந்துவரும் பயன் என்னை? பிராமணர்களுக்குள் மிக உரமான ஒற்றுமை நிலவிவருகிறது. பிராமணர் மகாநாடுகள் ஆங்காங்கே கூடி வருகின்றன. சாதி வரம்பு கடந்து வாழ்வு நடாத்திய சில பிராமணரும் பழைய இருட்டில் புகலாயினர்.

பிராமணரல்லாதாருள் என்ன நிகழ்ந்து வருகிறது ? பிராமணரல்லாதாருள் ஒவ்வொரு சாதியாரும் சாதி மகாநாடு கூட்டிவருகிறார். சாதி அழிவிற்காக இம்மகாநாடுகள் கூட்டப்படுகின்றன என்று சிலர் சொல்கிறார். அந்நுட்பம் எனக்கு விளங்கவில்லை. பழையபடி சாதிகள் உரம்படுமென்று எனது சிற்றறிவிற்குத் தோன்றுகிறது. ஒவ்வொரு சாதியாரும் சட்டசபை இருக்கைகளில் இடம்பெறத் தீர்மானஞ் செய்வது என்ன காட்டுகிறது ? பிராமணர் பிராமணரல்லாதார் பிணக்கால் ஒற்றுமை விளையாது வேற்றுமை விளைந்துவரல் கண்கூடு.

நமது நாட்டில் இருவினை நிகழல் வேண்டும். ஒன்று நாட்டு விடுதலை; மற்றொன்று நாட்டிலுள்ள குறைபாடுகளைக் களைந்து சமரசப் படுத்துவது. அதற்கோர் அமைப்பு வேண்டும். இதற்குப்புதியதோர் அமைப்பு காணவேண்டுவதில்லை. காங்கிரஸ் என்னும் பழைய அமைப்பு ஒன்றிருக்கிறது. அரசியல் விடுதலைப்போருக்கு அதைக் கருவியாகக் கொள்ளலாம். மற்ற அமைப்புக்களில் அரசியலைப் புகுத்தாது சமூக சீர்திருத்தத்துக்கென அவைகளைப் பயன்படுத்தலாம். இவ்விண்ணப்பத்தை ஜஸ்டிஸ் கட்சி பிராமணரல்லாத தலைவரை நோக்கிச் செய்துகொள்கிறேன். ஜஸ்டிஸ் கட்சியார் காங்கிரஸில் சேர்ந்து தேசத் தொண்டு செய்யுமாறும், அன்னார் தமது தென்னிந்திய நல வுரிமைச் சங்கத்தைச் சமூக சீர்திருத்தத்துக்கெனப் பயன்படுத்துமாறும் வேண்டுகிறேன்.

Tamil Heritage Foundation International Digital Library EBook collection

# பஞ்சமா பாதகங்கள்.

(நவமணி எழுதுவது.)

[முன் தொடர்ச்சி.]

நான்காவதாகவுடைய பாதகமென்னவெனில் கொலை. கொலையென்றால் மனிதர்க்குள் ஒருவர்க்கொருவர் கொலைசெய்து கொள்வதுமட்டுமல்ல; பல ஜீவப்பிராணிகளின் உயிரைவாங்குவதும் கொலையேயாம். எல்லாவகைகளும் இப்பூமியில் மனுஷரால் ஆளப்பட்டு வருகிறபடியால் மானிடருக்கின்றியமையாத இடையூறுகள் நிகழ்ந்தபவற்றை மனுஷன் அடக்குவதே உத்தமம். "கொல்லாமை முன்னினிது" என்பது இனிது நாற்பது. இதற்கொப்ப இயேசு பெருமானும் கொலை செய்யாதிருப்பாயாக வென்று கற்பனையாகக்கூறியுள்ளார். எவனொருவன் கொல்லாவிரதத்தை அநுஷ்டிக்கிறானோ அவன் மிகவும் மேம்பட்டவனென்றே கூறலாம். தவிர உயிர்களை வதைத்துக்கொன்று புசிப்பினும் அவைகள் சரீரத்திற்கு நற்சுகத்தைக் கொடா. வறுமையும்பிணியுமுடையவர்களை ஆன்றோர் முற்பிறப்பில் கொலை செய்தவரென்று பகர்வார்கள். "கொல்லான் புலாலை மறுத்தானைக் கைகூப்பி யெல்லாவுயிருந் தொழும்". தன்னைப் போல் பிறனையும் நேசி என்பதிலிருந்து குருட்டாட்டமுள்ள விலங்கினங்களையும் காப்பது நம்கடமையாகுமன்றோ! கொல்லாமையேநல்வழியில நடத்தும் ஓர் தர்மச்செய்கை. கொலையே ஏனையபாவங்களுக்குக் காரணமாகும் எவனொருவன் பிறவுயிர்களை வாங்குகின்றானோ அவன் மகாபாவியாவான். எவனொருவன் கொல்லாமையென்கிற தர்மத்தைக் கடைப்பிடிக்கின்றானோ அவன் துறவிகளுள் தலைமைபெற்றோங்குவான். எவனெவன் கொலையென்பதைக் கனவிலும் கருதானோ அவனது வாழ்நாட்களை எமனும் கைப்பற்றக்கூடாதாம்.

"கொல்லாமைமேற் கொண்டொழுகுவான் வாழ்நாண்மேற்
செல்லா துயிருண்ணுங்கூற்று." குறள்

தன்னுடலை வளர்ப்பதற்கு பிறவுடலைக் கொலைசெய்து புசிப்பது மிகவும் இழிவு; கிருபையும், அருளுமற்ற செய்கையாகும். நாம் எத்தனையோ எண்ணிக்கையான தவத்தைச் செய்திடினும் ஓர் உயிரைக் கொல்லாமையே மிகவுமினிது. கொலைத்தொழிற் செய்பவரில்லாத நாட்டையே நாடென்று சொல்லலாம்.

"பல்குழுவும் பாழ்செய்யுமுட்பகையும் வேந்தலைக்கும்
கொல்குறம்பு மில்லது நாடு." (குறள்.)

பட்டினத்துப் பிள்ளையார் தான் அநேக உயிர்களைப் போக்கடித்ததற்காக மன்னிப்பு கிடைக்கும்படிக்கும், உடலாகிய பாண்டத்திற்கு பலவுயிர்களையும் கொன்று புசித்து இக்காலத்தில் உலாவுகிறவர்களினது உயிரை இயமன் கொடூரமாகக் கொண்டுபோகும்போது என் செய்வார்களென்றும் தன் குல தெய்வத்தில் முறையிடுகிறார்.

"சடக்கடத்துக் கிரைதேடிப்பலவுயிர் தன்னைக்கொன்று
விடக்கடித் துக்கொண்டிருவார்நிருந்து மிகமெலிந்து
படிக்கடித் தின்றுழல்வார் கடமைக் காம்பற்றி நம
னிடக்கடிக்கும் பொழுதே து செய்வார் கச்சியேகம்பனே."

ஐந்தாவது பாதகமென்னவெனில் பொய். பொய்யும் புரட்டும் சொற்பகாலைக்குத்தான் நிலைக்குமே யொழிய நீடூழிகாலத்திற்கு நிலைபா. எப்பொழுதும் சிலர் பொய்யென்னும் புதரிலேயே மறைந்து கிடக்கிறார்கள். அப்பேர்ப்பட்ட புண்ணிய சொரூபிகள் பூமியில் இருந்தென்ன நன்மை? எவரொருவர்கள் பொய்யைக்குணமாகக்கொண்டு மெய்யையறியார்களோ அவர்கள் ஐம்புலன்களை அடக்கியும் யாதொரு பிரயோஜனமில்லை.

"ஐயுணர் வெய்தியக் கண்ணும் பயமின்றே
மெய்யுணர் வில்லாதவர்க்கு." (குறள்.)

நம்மவர்களில் பெரும்பான்மையோர் பொய்யை அற்பமாகவெண்ணி பஞ்சமாபாதகங்களிலொன்றென்று கருதாமல் பகிரங்கமாகப் பொய் சொல்கிறார்கள். ஒருவன் தான் சொல்லுகிறது பொய்யென்று தெரிந்தும் சொல்வானாகில் நல்மனதே தன்னை வதைத்துக்கொண்டேயிருக்கும். எவனொருவன் பொய்யைக்கருதானோ அவன் முத்தியை யடைதற்காக வேறு தர்மங்களைச் செய்யவேண்டாம். பொய் சொல்லாமை நம்மை மேன்மைபெற்றோங்கச் செய்யும்.

"பொய்யாமை பொய்யாமை யாற்றினறம்பிற
செய்யாமை செய்யாமை நன்று" குறள்

கொல்லாமை இனிது, பொய் சொல்லாமை அதனினுமினிதாம். கோபம், பொய், காமம், அகங்காரமாகியவற்றை இருப்பிடமாகக் கொண்டுள்ளோர்களுக்கு ஞானம் சித்திக்காது. ஒருவனுடைய தேகம் நீரால் சுத்தப்படுவது போல உள்ளமானது பொய்யையல்லாமல் சத்தியத்தால் சுத்தமாகும். ஆன்றோர்க்கு பொய் சொல்லாமையே திருவிளக்காகும். இவ்வைந்து துரோகங்களும் இலக்குமியால் கைவிடப்பட்டோரையே அணுகுமேயொழிய உத்தமர்களைப்பற்றா. எவனெவன் இஃதில் ஈடுபடாதிருக்கிறானோ அவன் முத்தியை அடைவானென்பதற்குச் சந்தேகமில்லையா. ஆகையால் நாம் இவ்வைந்தையும் அறவே யொழிப்போமாக.

---

# துணுக்குகள்.

1926-ம் ஆண்டில் சீனாவில் கிறிஸ்தவப் பாதிரிகள் 4142500 பைபில் பிரதிகளை விற்பனை செய்திருக்கின்றனர்.

* *

எறும்பு ஒன்று தன் கனத்தைவிட மூவாயிரம் மடங்கு கனமுள்ள பொருளையும் வாயில் கவ்விக்கொண்டு போகக்கூடிய சக்தியடைத்ததாம்.

* *

இங்கிலாந்தில் பொதுவாகச் செலவாகும் தொகையில் பவுனுக்கு 15 ஷில்லிங் ஸ்திரீகளால் செலவிடப்படுகிறதாம். 1 பவுண்—21 ஷில்லிங்.

* *

லைசென்ஸ் இன்றி ஆயுதம் வைத்துக்கொள்ள கிராம பாதுகாப்புக்காக பர்மா வாசிகளுக்கு உரிமையளிக்கப்பட்டிருக்கிறது.

* *

தென்னாப்பிரிக்காவிலுள்ள சோனகஜாதிப் பெண்கள் தங்கள் ரவிக்கைகளை கழற்றுவதேயில்லையாம். புதியவையணிந்தாலும் பழய ரவிக்கைகளின் மேலேயே அணிவார்களாம். இப்படியே ஒரு மாது நாற்பது ரவிக்கை வரை அணிந்திருக்கிறாளாம்.

* *

யுனைட்டெட்ஸ்டேட் (அமெரிக்கா)டில் சராசரி ஐந்து பேருக்கொருவருக்கு மோட்டார் வாகனம் இருக்கிறதாம்.

* *

பால் கொடுக்கும் ஒருவகை மரம் மத்திய அமெரிக்காவில் இருக்கிறதாம். அதனுடைய மேல் பட்டையை செதுக்கிவிட்டால் பால் வடிகிறதாம். அந்தபால் ருசியாகவும் புஷ்டியுள்ளதாகவுமிருக்கிறதாம்.

---

புத்திர சந்தான எண்ணெய்.



ஸ்திரீகளின் கர்ப்பஸ்தானத்தில் புழுக்கள் உண்டாகி அவ்வப்போது விந்தைப் புசித்து வருவதினாலும்! மற்றும் பல காரணத்தினாலும் கர்ப்பஸ்தானத்தில் சதை வளர்ந்து சொரிபற்றி இரத்தங்கட்டியிருந்தாலும் மூலச் சுழியில் வாய்வு பிசகம் தங்கினாலும் கருத்தரிக்காது. இந்த எண்ணெயைக் காலை மாலை இருவேளையும் 1-அல்லது 2-காசு அளவு உள்ளங்கையில் விட்டு நக்கிச் சாப்பிடவேண்டியது. இப்படி 15-நாள் சாப்பிட்டால் கர்ப்பஸ்தானத்திலிருக்கும் ஆகவித குற்றங்களையும் நீக்கி சுத்தப்படுத்தி மறுமாதத்திலேயே கர்ப்பந்தரிக்கும். சிலருக்கு கருத்தரித்து 2-3-4 மாதங்கள் வரையில் சூலாயிருந்து திடீரென்று உடைந்து போவதுமுண்டு. இப்பேர்க்கொத்த கெர்ப்ப தோஷமெல்லாம் இந்த எண்ணெயால் நிவர்த்தியாகி தீர்க்காயுளான கருத்தரிக்கும். புட்டி 1-க்கு ரூ 2.

கேட்லாக் இனாம். விலாசம்:—

என். வி. கோபால் மேடிகல் ஹால்.,

37. திருப்பள்ளி தெருவு, சௌக்கார்பேட்டை, மதராஸ்.

B. Abdul Karim Sahib,

Kareemiya Unani Medical Store,

Cuddalore, O. T., (South India)

அருமை துரைகளே ! பொறுமையாய்க் கவனியுங்கள் !!

இழந்துபோன பலத்தையும், நலத்தையும், நரம்புத்திடத்தையும், அதிஅற்புத ஆச்சரியமான இன்பசுகசக்தியையும் இது உபயோகித்த ஒரே வேளையில் தெரிந்து கொள்ளலாம். ஆயிரக் கணக்கான நற்சாக்ஷிக் கடிதங்களும், தங்க மெடலும் பரிசுபெற்ற

ஜவாஹீர் முபற்ரு என்னும்

மதன மோஹன ஊர்க்குருவி

கிருத லேகியம்.

அசல் பாகம் ! அருமையானது !!

பரீக்ஷைக்கும் பலனுக்கும் உத்தரவாதமுள்ளது. இதப் பாகம் சரியாக வேறு எந்த கம்பெனியார்களும் செய்து காட்டும்பக்ஷத்தில் அவர்களுக்கு எங்கள் கம்பெனியால் ரூ 500 இனாம் கொடுக்கப்படும்.

அன்பின் மிக்குள நண்ப சிகாமணிகளே !

அருமையும், அனுபவமும், பெருமையும், பிரபல்யமும், மஹா அற்புத ஆச்சரிய வல்லமை சக்திகளும் வாய்ந்த இந்த அசல் "முபற்ரு" லேகியத்தை உபயோகிக்கும் உத்தமர்கள் மணவாழ்க்கையிலே தாம் என்றுங் கண்டிராத சித்தானந்த கெம்பீர சிற்சுகவின்ப நலன்களையும், சில அற்புத குணங்களையும் தெரிந்துகொள்வார்கள். ஆஹா ! குணத்தால் சிறந்த இந்திரலோகத்திய "காமசஞ்சீவினி" இதுதானோ ! என்றும் பன்முறையும் புகழ்வார்கள். ஆணாய்ப்பிறந்து இவ்வுலகத்தில் வளர்ந்து இளம் பாலியப் பருவத்திலேயே மின்னார் மோகக்கன்னியிற் பட்டுக்கெட்டும், இன்னும் பலவிதக் காரணங்களினாலும் தேஹத்திற்குச் சதசாரணமாகிய நாத விந்தை வீண் விரயஞ் செய்தும், நல்ல வாலிபப் பருவத்தில் வீரிய விர்த்தி குறைந்து உலகின்பசக்தியை இழந்து ஆண் தன்மையற்ற வயோதிகர் போல் மயங்கி நிற்கும் புருஷர்களும், வாத பித்த சிலேற்பன மிகுதிக் குறைவாலும் எலும்புருக்கி வெட்டைச் சூட்டினாலும் ஜீவாத்தின பீடமாகிய சுக்கிலம் ஜலம்போல் நீர்த்து துரிதஸ்கலிதமுடையோரும், நித்திராபங்கமென்னும் சொர்ப்பனஸ்கலிதத்தால்நாளும்வாதனைப்பட்டுக்கொண்டிருப்பவர்களுமசுரம், பிரமேகம், விஷப்பாண்டு முதலிய வியாதிகளால் இரத்தம் குறைந்து நாதம் இளகி சர்வ நரம்புகளும் தளர்ந்து ஐம்புலன்களின் உற்சாகமுங் குறைந்து, வியாபக சக்தி குறைவு, லைகாலசந்தி, தேக காங்கை, இடுப்புவலி, பசி மந்தம், மலச் சிக்கல் முதலிய வியாதிகளால் சதா வருந்துவோரும்,

மனோதத்வ புத்தி சாதுர்யத்தைக் கொண்டு வேலை செய்யக்கூடிய லாயர்கள், குமஸ்தாக்கள், பாடலீகர்களும் மற்றும் வியாபக சக்தியால் வேலையையுடைய எந்தத் தொழிலாளர்களுமே இதனை உபயோகித்தால் நல்ல உற்சாகமும், சந்தோஷமும் அடைவார்கள். திடமான தேஹக் கட்டுப்பாட்டையும் வியாபகவிர்த்தி புதியமேனியையும் இரத்த விர்த்தி, வீரிய விர்த்தி, சந்தானவிர்த்திமுதலிய சர்வ நலன்களையும் பெறுவார்கள். சீக்கிரஸ்கலிதமுடையவர்களுக்கு இது ஓர் இணையில்லாத பரம சஞ்சீவியேயாகும்; குணம் செய்வதில் இது மஹா வல்லமையும், பேரும் பிரகீர்த்தியும் பெற்றது. இதனை பரீக்ஷிக்கும் ஒவ்வொரு நண்பர்களுக்கும் தப்பாமல் குணம் செய்யும் சத்தியமான சித்தானந்தயோக பாகம் இதுதான் என்றும் நாம் சொல்ல வேண்டியதில்லை. பலனும் நலனும் சில அற்புத ஆச்சரிய வல்லமெய்குணங்களும் ஒரே வேளையில் தெரியும். கண்டாலே தெரியும் காக்ஷி! தின்றாலே தெரியும் திடன் !! இத்தகைய குணங்கள் இதில் இல்லையென்றும் சத்தியமாகச் சொல்லுகிறவர்களுக்கு எமது கம்பெனியிலிருந்து ரூபாய் 100 இனாம் கொடுக்கப்படும். தன்னை பலப்படுத்திக்கொள்ள நாடும் போகவான்கள் கட்டாயம் ஓர் முறை பரீக்ஷை செய்யவும். உபயோக விபரம் கூடவே வரும். ஆர்டர் செய்யும் கனவான்கள் இந்த பேப்பரின் பெயரைக் குறித்து எழுதவும்.

40-நாள் மருந்து 16-பலம் டப்பி 1-க்கு விலை ரூ 10—0—0
20-நாள் மருந்து 8-பலம் டப்பி 1-க்கு விலை ரூ 5—0—0
10-நாள் மருந்து 4-பலம் டப்பி 1-க்கு விலை ரூ 3—0—0

பாக்கிங் & V. P. செலவு பிரத்தியேகம்.

B. அப்துல் கரீம் சாயபு,

கரீமியா யூனானி மெடிகல் ஸ்டோர்,

கூடலூர், O. T.

Tamil Heritage Foundation International Digital Library EBook collection